O.1812
12

# இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும்

அ. திருமலைமுத்துசுவாமி

ஔவை நூலகம்

# இலக்கியத்தில்
# விலங்குகளும் பறவைகளும்

அ. திருமலை முத்துசுவாமி
M. A., B. T., Dip. Lib. Sc.,
நூலகத் துறைத் தலைவர்
தியாகராசர் கல்லூரி, மதுரை.

ஔவை நூலகம்
4/141 பிராட்வே, சென்னை-1

ஔவை வெளியீடு: 26.
முதற் பதிப்பு: ஜூன், 1959.
உரிமை ஆசிரியருக்கு.

விலை: ரூ. 1—50.

AVVAI NOOLAHAM,
PUBLISHERS & BOOK-SELLERS,
4/141, BROADWAY, MADRAS-1.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 5—7 |
| 2. | விலங்குகள் | 8—28 |
| | உயிர்களில் பெரியது—இசைக்கு மயங்கிய களிறு—களிறு தரு கூட்டம்-வலிமைமிக்க விலங்கு-புலிப்பல் தாலி-வாழ்க குரங்கினம்!—மந்தியின் கற்பு—திருட்டுக் குரங்கும் முரட்டுக் குரங்கும்—உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு—விளையாட்டு வீரர்கள்—மான்—மான்களின் காதல் திறம்—கற்றோர் ஏத்தும் கவரிமான்—ஆண் மானின் தவிப்பு—ஆமான்—ஏறு தழுவுதல்—எருமையின் எழிற் சித்திரம்—ஆடு—நீர்வாழ் விலங்குகள். | |
| 3. | பறவைகள் | 29—63 |
| | பறவைகளின் பொதுப் பண்புகள்—பாவலரும் பறவைகளும்—குறிஞ்சி நிலப் பறவைகள் ; ஆடும் மயில்—கொஞ்சு மொழி அஞ்சுகம்—பாலை நிலப் பறவைகள்—புறா—புறவுக் குடும்பம் — பருந்து — பருந்துக் குடும்பம் — உழைப்போர் பயன் சோம்பேறிகளுக்கே!—காக்கை கரைந்தால்...?—மக்களின் மணிப் பொறி—கோழிக் குடும்பம் — ஆந்தை—அன்றிலும் மகன்றிலும் — அன்றிலும் அழகியும்—பொது மகளும் அன்றிலும்— மகன்றில்—பாடும் குயில்—வண்டும் நண்டும்—வள்ளுவர் போற்றும் வானம்பாடி—குருவி—ஆண் குருவியின் அன்பு—உடலோ ஊடல்—அன்ன நடையும் இளமாதர் மென்னடையும்—பொய்கையில் காதலர்—பிற பறவைகள்—நாரைக்குப் புலவர் செய்த நலம்—நாரை வீரர் வரிசை—பறவைகளையே பாடிய பாக்கள்—வரலாற்றில் ஒரு புதுமை. | |
| 4. | விலங்கு-பறவைச் சண்டைகள் | 64 |
| 5. | இந்தியாவில் விலங்குகளும் பறவைகளும் | 65-69 |
| | தென்னகம்—கங்கைச் சமவெளி—இமயமலைப் பகுதி | |
| 6. | நாட்டின் செல்வம் | 70-76 |

S. SATYAMURTHI, B.A.
Chief Accounts Officer
and Special Officer,
Zoo Centenary Celebrations.

Corporation of Madras
Ripon Buildings,
Madras.
25th October 1955

To,

MR. A. THIRUMALAIMUTHUSWAMY,
Thiagarajar College,
Madura.

Sir,

Sub : ZOO CENTENARY CELEBRATIONS,
Award of Prize for the best essay.

The Committee of judges have decided to award the prize for your Article entitled "Poetical reference of animals and birds in Tamil Literature." Please make it convenient to go over here and be present on the day of Inauguration of the Zoo Centenary Celebrations on the 31st October to enable the Award of Prize to be given to you by His Excellency the Governor. Please write to me by return of post about your arrival.

(Sd.) SATYAMURTHI,
Special Officer,
Zoo Centenary Celebrations,
25—10—'55.

# 1. தோற்றுவாய்

பாரினில் எழிலுடன் இலங்கும் பல்வகைப்பட்ட இயற்கைப் பொருள்களைப் புலவர் பெருமக்கள் தாம் கண்டு களித்ததோடு நில்லாது, அவற்றினைக் கூர்ந்து உணர்ந்து, உணர்வுடன் குழைத்து, உருகிப் பெருகி தம் உள்ளத்தின் தோற்றமாய், உணர உணர அன்பின் நிறைவால் ஊற்றெழும் கண்ணீரை ஒழுகச் செய்வதாய், உணர்ச்சி ஊடுருவப் பெற்றதாய், படிக்குந்தோறும் இனிமை ஊட்டிப் பின்னர் அதனை எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாய் விளங்கும் சொல்லோவியங்களாக (Word Pictures) அமைக்கும் பாடல்களே என்றும் நிலைத்து நிற்கும் ஆற்றல் உடையதாகின்றன.

தமிழ் நூல்களில் உயிருள்ள பொருள்களைப்பற்றியும், உயிரில்லாத பொருள்களைப்பற்றியும் பாடப்பட்ட பல பாக்கள் நிறைந்துள்ளன. அவற்றில் பறவைகள் விலங்குகளைப்பற்றிப் பாடியுள்ள பாக்களை நோக்கும் பொழுது தனிப்பட்ட உணர்ச்சி-ஒருவித ஆர்வம் இயற்கையாக எழுகின்றது. மன உணர்வினை உடைய கவிஞன் ஏனைய விலங்கு, பறவை முதலிய மன உணர்வில்லா நண்பர்களோடு உறவாடி, தான் சொல்லவேண்டிய கருத்தினை விளக்கமுற எடுத்தியம்ப விழைகின்றான். இந்த நண்பர்களின் உதவியால் கவிஞன் தன் கருத்தை மக்கள் மனத்தில் பதியுமாறு எளிதாக எடுத்து இயம்புகின்றான். வண்டு, தும்பி, கிளி, குயில், காகம், அன்றில் முதலிய பறவைகளையும், குரங்கு, வேழம், முதலிய விலங்குகளையும் நுணித்து அறிந்து, அவை அறிவுறுத்தும் செய்திகளாகக் கவிதைகள் பலவற்றைப் பைந்தமிழ்ப் புலவர்கள் நமக்கு

யாத்துத் தந்துள்ளனர். பொதுவாக இத்தன்மை புலவர் யாவருக்கும் அமையினும் சிறப்பாகத் தமிழ் மக்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாய், ஊக்கத்தின் உறைவிடமாய், உண்மைக் கருத்துக்கள் பலவற்றை நவில்வனவாய், தமிழ்மணம் வீசும் சங்க இலக்கியங்களைச் சமைத்த நாவீறு படைத்த நல்லிசைப் புலவர் பெருமக்களும் சொல்லிசை வாய்ந்த மெல்லியரும் விலங்குகளையும் பறவைகளையும் சிறப்புடன் விளித்து, பல சுட்டி, பல வருணித்து, பலவற்றில் அவற்றின் வாழ்க்கையை குறித்துப் பாடியுள்ளனர்.

தமிழ் நாட்டில் இயற்கையை மறந்து எவரும் வாழவே முடியாது. தமிழ்ப் புலவர்கள் இயற்கையை நுணுகி ஆய்ந்து, பின்னர்த் தமிழ் நாட்டு நிலத்திற் கேற்ப விலங்கு-பறவை வரையறை செய்து ஒழுங்குடன் பாடியுள்ளனர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன ஐந்திணையாகும். இவை மலை, நாடு, காட்டுநிலம், வயற் பகுதி, கடற்கரை என நில வகையாகவும், புணர்தல் பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என ஒழுக்க வகையாகவும் அகப்பொருளில் முறையே பொருள்படும். அகப் பொருளுக்குரிய கருப்பொருள்கள் பதினன்கினுள் விலங்கும் பறவையும் அடங்கப்பெறும். முன்னாள் ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ப, பறவை-விலங்குகளை வரையறை செய்திருந்த வகையினை அடுத்த பக்கத்தில் தரப்பட்டிருக்கும் அட்டவணை நன்கு எடுத்துக்காட்டும்.

விலங்குகள் - பறவைகளைப்பற்றிப் பாடியிருக்கும் புலவர்களின் கற்பனைத் திறனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை, முறையே, அவைகளின் வாழ்க்கையை அப்படியே காட்டுதல், மனித வாழ்க்கையின் நிகழ்ச்சியை அவற்றிற்கு ஏற்றிக் காட்டுதல், மக்கள் வாழ்வைக் காட்டுதல் என்பனவை ஆகும். மூன்றாவதாகிய மக்கள் வாழ்வைக் காட்டுதல் இயற்கையுடன் இலங்கி இன்பம் பயக்கும் தன்மையுடையதாய் விளங்கும்.

| எண் | நிலத்தின் பெயர் | விலங்குகள் | பறவைகள் |
|---|---|---|---|
| 1 | குறிஞ்சி | புலி, கரடி, யானை, சீயம் | கிளி, மயில் |
| 2 | பாலை | செந்நாய் | புரு, பருந்து, எருவை, கழுகு |
| 3 | முல்லை | மான், முயல் | காட்டுக் கோழி |
| 4 | மருதம் | எருமை, நீர் நாய் | வண்டானம் மகன்றில், நாரை, அன்னம், கம்புள், குருகு, தாரா |
| 5 | நெய்தல் | சுறுமீன் | கடற்காகம் |

# 2. விலங்குகள்

விலங்குகளில் ஊர்வனவும், நீர்வாழ்வனவும் அடங்கப் பெறும். முன்னர்க் காட்டிய விலங்குகள் தவிர வேறு சில விலங்குகளும் தமிழ் நாட்டில் வாழ்கின்றன. அவை அணில், ஆடு, ஆமான், ஆமை, ஆனேறு, எலி, எறும்பு, ஓந்தி, கடமா, குதிரை, குரங்கு, தவளை, நண்டு, நாய், பசு, பல்லி, பாம்பு, மரை இனம், முதலை, வருடை, வரையா, வெருகு என்பனவாகும். இவ்விலங்குகள் அனைத்தும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றிருந்தாலும் வேழம், புலி, மான், குரங்கு, நீர்நாய் முதலியன சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான பாடல்களில் தமிழ்ப் புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளன.

## உயிர்களில் பெரியது

உயிர்களில் பெரியது வேழமாகும். இதனை யானை எனவும், ஆனை எனவும் வழங்குகின்றோம். "முத்திறத்தனை வெனப் பிறப்பின் மூரி வெங்களியானை" என்று பாரதத்தில் கூறியிருப்பது போன்று வேழமானது மூவகைப் பிறப்புடையது என்று சொல்லப்படுகின்றது. இவற்றை முறையே கிரிசரம் (மலையில் பிறப்பது), வனசரம் (வனத்தில் பிறப்பது), மூரிசரம் (கடலிற் பிறப்பது) என வழங்குவர். வேழத்தின் துதிக்கை நிலம்தோய அமைவதே நல் இலக்கணமாகும். யானையின் உருவினைப்பற்றிக் கூற வந்த தமிழ்ப் புலவர்கள் அது சிறிய கண்களையும், ஆழ்ந்த வாயையும், மெலிந்த தலையையும், சேம்பின் இலையை ஒத்த செவிகளையும், நிலம் தோய் குதிரைப்போன்ற துதிக்கையையும், பேயின் பல்லைப்போன்று விளங்கும் நகங்களையும் உடையது எனப் பலவாறாகப் பாடியுள்ளனர். மூங்கில், கரும்பு,

தினை, யா, ஓமை முதலியன யானை விரும்பும் உணவு களாகும். இவ்விலங்கின் சிறப்பினை,

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்!"
"யானை வரும் பின்னே;
மணியோசை வரும் முன்னே!"

என்றும் தமிழ் நாட்டுப் பழமொழிகளால் நன்கு அறியலாம்.

குறிஞ்சி நில மக்கள் விலை உயர்ந்த யானைக் கொம்பு களை விற்று வாழ்ந்தனர். இதனது கொம்பால் தேர் இயற்றப்பெற்றது.

"பணைமருட டக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர் மருப் பேந்திய வரை மருணோன்பகடு"

என்ற புறநானூற்று வரிகள் வேழத்தினது முற்றிய கொம்பில் முத்துண்டாம் எனக் கூறுகின்றன.

தமிழ் நாட்டு மன்னர்கள் வெற்றி வீரர்களாய் விளங்கு வதற்கு வேழப் படையே பெரிதும் உதவியது. தமிழ்ப் பெரு மன்னர்கள் அன்று வேழப் படையின் துணை கொண்டே பெரும் பெரும் வெற்றிகளைப் போரில் பெற் றனர். கடிய அரண்களையும், வலிய கோட்டை வாயில் களையும் தகர்த்து எறிவதற்கு யானைகளே பயன்பட்டன. வள்ளல்கள் பரிசிலர்க்கு யானைகளைப் பரிசுகளாக வழங் கினர். பண்டு பெண்டிரும் பிடியின் மீது ஊர்ந்து செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனை,

"வாழி சோழகுல சேகரன்வகுத்த விசையின்
மதுர வாரியென லாகுமிசை மாதரிதெனு

ஏழு பாருலகொ டேழிசைவ ளர்க்க வுரியாள்
யானை மீதுபிரி யாதுடனி ருந்து வரவே."

என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுளால் நன்கு அறியலாம். ஒரு அரசனுக்கு மகப்பேறு இல்லாவிட்டால் யானையைத் துகிலால் கண்கட்டிவிட்டு அதன் பிடரியின் மேல் ஏற்றிக்கொண்டு வருபவன், அவ்வரசனுக்குப் பின்னர்ப் பட்டம் சூடும் பழக்கம், பண்டு நம் பைந்தமிழ் நாட்டில் இருந்துவந்ததென்பதைப் பின்வரும் பெரிய புராணச் செய்யுள் இனிது எடுத்துக்காட்டும்.

" கண்கட்டி விடுங்களி யானையைக் காவன் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திரு வாலவாயின்
விண்பிற்பட வோங்கிய கோபுர முன்பு மேவி,"

துணை அன்பிற்கு எடுத்துக்காட்டாக யானையைப் பல புலவர்கள் பாடியுள்ளனர். மேலும் இது தன் இனத்தை நன்கு ஓம்பி உணவூட்டும் பெற்றியது. கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் செல்லும் யானை "ஏந்தல்" என்றும் "யூதநாதன்" என்றும் சொல்லப்படும். சங்க இலக்கியங்களில் பின்வரும் காட்சிகளைக் காணலாம். களிறும் பிடியும் ஒன்றனோடு ஒன்று இணைந்து அன்புபூண்டு ஒழுகுகின்றன. களிறு தன் மடப்பிடியினைத் தழுவிக்கொண்டு குன்றகச் சிறு குடியிற் சென்று பின்னர் மகிழ்ச்சியை ஊட்டும் மாலை நேரத்தில் அப்பிடியோடு மலை முழைஞ்சுகளிற் புகுந்துசெல்ல அங்கு புலியொன்று எதிர்ப்படுகின்றது. ஆனால் களிறு புலியினை விரட்டிப் பிடியினது பயத்தைத் தெளிவிக்கின்றது. இவ்வாறு களிற்றிற்கும் பிடிக்கும் இடையே உள்ள அன்பினை விளக்கும் காட்சிகள் பலவற்றைத் தமிழ்ப் பாக்களில் காணலாம். மேலும்

புலியைத் தாக்கிப் புண்ணுறும் யானை, அப் புலியை வருத்தும் களிறு, வாழையால் மதனழிந்து கிடக்கும் களிற்றைத் தன் கையால் தடவி உபசரிக்கும் பிடி, யாமரப் பட்டையை உரித்துத் தன் பிடிக்குக் கொடுத்து அதன் பசியைக் களையும் களிறு, புழுதி படிந்த மேனியுடன் குண்டுக் கற்களைப்போல நிற்கும் ஆண் யானைகள் முதலியவற்றை எல்லாம் செந்தமிழ்ப் புலவர்கள் செவ்விய முறையில் சித்திரித்துள்ளனர்.

## இசைக்கு மயங்கிய களிறு

குன்று அழகுடைய குறிஞ்சி நிலத்தில் தினைப்புனப் பரண் மேலிருந்து பாவையொருவள் குறிஞ்சிப் பண்பாடி நின்றாள். அதுகால் கடும்பசிகொண்ட களிறொன்று பயிரை அழித்துத் தினைக்கதிரைத் தின்று தன் பசியைப் போக்கிக்கொள்ள தினைப்புன வயலிலே நுழைந்தது. ஆனால் குறிஞ்சி நிலக் குலக்கொடி பாடிய அமுத இசை, இன்பத் தென்றலிலே மிதந்து வந்து களிற்றின் காதுகளிலே பாய்ந்தது. பாயவே களிறு தன் வசமிழந்து இன்னிசையின் இன்பப் போதையிலே இன்புற்று மயங்கி நின்றது. இதை அகநானூற்றுப் பாடலொன்று அழகுத் தமிழில் அள்ளித் தருகின்றது. அது வருமாறு :

“ஒலியல் வார்மயிரு ளரினன் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
பாடாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம் புகன் மழகளிறு றங்கும் நாடன்.”

## களிறு தரு கூட்டம்

சந்தனமும், சண்பகமும், தேமாவும், தீம்பலவும், அசோகும், வேங்கையும் மலர்ந்து; மாதவியும், மல்லிகையும்

முல்லையொடு மணங்கமழ்ந்து, வண்டறைந்து, வரிக்குயில்கள் பாடத் தண் தென்றல் தழுவும் நண் பொழில்களும், மாணிக்கச் சுனைகளும், அழகொழுகும் அருவிகளும் கொண்டதாகும் குறிஞ்சி நிலம். அந்நிலத்திலே உள்ளது தினைப்புனம். தினைப்புனக் காவலின் பொருட்டு வந்த அழகிய ஆரணங்கு ஒருத்தியும் அவளது தோழியும் பொழிலிடத்து விளையாடி நின்றனர். அதுகால் வேட்டையின் காரணமாக அங்கு ஒரு தலைவன் வந்தான். வந்த அவன் ஆரணங்கின் அழகில் ஈடுபட்டு செய்வதொன்றும் அறியாது நின்றான். இந்நிலையில் ஒரு களிறானது கண்டோர் கலங்கப் பிளிறிக்கொண்டு அங்கு வந்தது. பீதியடைந்த அப் பெண்கள் இருவரும் நடுங்கி நாண் துறந்து அத் தோன்றலை விரைந்தடைந்து வெறியுற்ற மயிலைப்போல் வெளிறி நின்றனர். இது கண்ட தலைவன் தயங்காது, கூரம்பினை எடுத்துக் களிற்றின் முகத்திலே அழுந்த எய்ய, கலல் பிரு களிறும் காற்றினைப்போற் கடிதிற் சென்று காட்டினுள் மறைந்தது. பின்னர் தலைவன் தன் மனநிலையை எடுத்துரைத்து அவள் மனம் ஒப்பக் கொடுப்போரும் அடுப்போரும் இன்றித் தலைவியின் அன்பைப் பெற்றான். பின்னர் தலைவியும் தோழியும் தங்கள் பார்வையால் அக் குரிசிலுக்கு நன்றியைத் தெரிவித்து நின்றனர்.

அடுத்து இருவரும் தலைவனை விட்டு நீங்கி அருகிலிருந்த ஆற்றுக்குச் சென்று அதனிற் குதித்து நீராடினர். குறிஞ்சிக் கடவுளாகிய குமரனை நினைத்து மலையில் உறையும் தெய்வ மகளிர் கைகோத்து ஆடுவதுபோல இருவரும் கைகோத்துக்கொண்டு விளையாடுகையில், இடிந்த கரையிலுள்ள வாழைமரம் நீரால் இழுக்கப்பட்டாற்போல நீரோட்டம் அவ்விருவரையும் இழுத்துச் சென்றது. இருவரும் அச்சத்தால் கூக்குரலிடவே, அது கேட்டு அங்கு

வந்த குரிசில் (இருவரையும் முன்பு யானையிடத்திலிருந்து காத்தவன்) ஆற்றோட்டத்தின் கடும் வேகத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது நீரிற் குதித்து, இருவரையும் கொண்டுவந்து கரை சேர்த்தனன். அதுகால் அவன் தலைவியை உளமுருகப் பார்த்து 'நின்னை ஒருபோதும் கைவிடேன்' என்று கூறி, அவளது நெற்றியைத் துடைத்து, பின் 'நின் அருள் வேண்டும்' என்று கூறுவான் போலத் தோழியை நோக்கிச் சிரித்தனன். பத்துப் பாட்டில் ஒன்றான குறிஞ்சிப் பாட்டில் காணும் இக்காட்சியினைக் கற்றறிந்தோர் 'களிறு தரு கூட்டம்' எனக் கூறுவர். கனல்மிகு களிற்றினிடமிருந்து மங்கையரிருவரையும் தலைவன் காத்தமையைக் கன்னித் தமிழ் வளர்த்த கபிலர்,

"கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமரங் கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
உய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோல்
உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்து புறங் கொடுத்த பின்னர்."

என்று சுவைபடப் பாடியுள்ளார்.

## வலிமைமிக்க விலங்கு

புலி வலிமைமிக்க விலங்குகளில் ஒன்றாகும். அது பெரும்பாலும் மலையைச் சார்ந்த இடங்களில்தான் வாழும்

செந்நாய், யானையினம் முதலியவற்றைப் புலியானது கொன்று தின்னும். இதற்கும் வேழத்திற்கும் நடக்கும் போரினைப்பற்றி புலவர்கள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். யானையைப் புலி வெற்றிபெறுதலும் உண்டு; யானையால் தாக்கப்பட்டு புலி வலியிழத்தலும் உண்டு. சிவந்த கண்களையும், உடலில் வளைந்த கோடுகளையும் உடைய இவ் விலங்கு இருந்தபடியே இரு பக்கத்தினையும் பார்க்கும் இயல்புடையது. வேங்கையின் பூத்த கிளை இதனது உடலுக்கும், கடலொலி இதனது முழக்கத்திற்கும் ஒப்புமையாகப் பேசப்படுகின்றது. ஆண் புலி 'ஏற்றை' என்று இலக்கியத்தில் எடுத்தியம்பப்படுகின்றது.

## புலிப்பல் தாலி

குறிஞ்சி நிலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இயற்கையிலேயே கொடிய விலங்குகளுக்கு இடையே வாழ நேர்ந்ததால் அவர்களது விளையாட்டெல்லாம் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொல்வதிலும், காட்டுப் புனங்களிலே காவல் புரியும் கன்னிப் பெண்களை அச்சுறுத்தும் புலி, யானை முதலியவற்றைக் கொன்று பின்னர் அப் பெண்களிடம் அன்பு காட்டுவதிலுமே வளர்ந்தது. மேலும் மறத் தமிழர்கள் வீரமிக்க புலிகளைக் கொன்று தங்கள் வீரத்திற்கு அறிகுறியாகக் கொணர்ந்த புலிப் பற்களை மகளிர் மகிழ்ச்சியுடன் அணிந்துகொண்டனர். இப் பழக்கமே நாளடைவில் தாலிகட்டிக்கொள்ளும் வழக்கமாயிற்றென்று அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

## வாழ்க குரங்கினம்!

டார்வின் கொள்கைப்படி குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதனாவான். அத்தகைய குரங்கினைப்பற்றிய பல பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அப்

பாடல்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் பயப்பனவாகும். ஆண் குரங்கு, கடுவன், கலை என்றும், பெண், மந்தி என்றும், குட்டி, குருளை, பார்ப்பு, பறளை என்றும் வழங்கப்படுகின்றன. கடுவனும் மந்தியும் ஒன்றோடொன்று அன்புபூண்டு வாழும் வரலாறுகள் சில குறுந்தொகை என்னும் நூலில் காணப்பெறுகின்றன.

முசு, ஊகம், எனக் குரங்கு பலவகைப்படும். முசு என்பதின் முகம் கரியதாய் இருக்கும். ஊகம் என்பது கருங்குரங்கைக் குறிக்கும். இதன் உடல் முழுவதும் கரியதாகவும் முகம் வெள்ளையாகவும் இருக்கும். குரங்கினது வாய் சிவப்பாகவும், பல் கூரியதாகவும் இருக்கும். பொதுவாக இது நீண்டு வளர்ந்திருக்கும் மரங்களிலே ஏறிப் பாய்ந்து விளையாடும் இயல்பினது. மரங்கள்தோறும் சென்று பழங்களை எல்லாம் கடித்து உண்ணும்; பலாப் பழத்தைக்கூடத் தோண்டிச் சுளையை உண்ணும்.

### மந்தியின் கற்பு

கணவனாகிய கடுவன் இறந்து விடுகின்றது. கைம்மை வாழ்வை விரும்பாத குரங்கு தானும் பத்தினிப் பெண்டிரைப்போல உடன் மாயத் துணிகின்றது. ஆனால் மரமேறவும் தெரியாத குட்டியிடத்துள்ள பாசம் முதலில் தடை செய்கின்றது. எனினும் மனத்தினைத் தேற்றிக் கொண்டு தன் குட்டியினை இனத்திடத்தே கையடை கொடுத்துப் பின் உயிரை மாய்த்துக்கொள்கின்றது. இதனை,

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி"

என்று குறுந்தொகை கூறுகின்றது.

## திருட்டுக் குரங்கும் முரட்டுக் குரங்கும்

பிறர் சோர்வுற்றிருக்கும் நேரத்தை அறிந்து அவர்களிடம் உள்ள உணவுப் பொருட்களைக் கவர்ந்து செல்வதில் மந்திக்கு நிகர் மந்தியேதான். குன்று அழகுடைய குறிஞ்சியில் கரிய மலையிலுள்ள அகன்ற பாறையினிடத்து சிவந்த தினை பரப்பப்பட்டிருந்தது. குறிஞ்சி நில மகளாகிய கொடிச்சி இத் தினையினைக் காவல் காத்துக்கொண்டிருந்தாள். இதே நேரத்தில் சில பெண் குரங்குகள் தங்கள் குட்டிகளுடன் தினையைக் கவருதற்பொருட்டுச் சிறிது தூரத்தில் காத்திருந்தன. தினைப்புனம் காப்பதில் சிறிது சோர்வுற்ற கொடிச்சி சுனைநீர் குடைதற்பொருட்டு சுனையிற் பாய்ந்தனள். இதனைக் கண்ட பெண் குரங்குகள் குட்டிகளுடன் மரக்கிளையினின்றும் இறங்கிப் பாய்ந்து சென்று அத்தினையைக் கைக்கொண்டன. இக்காட்சியினை இருந்தையூர்க் கொற்றன் என்ற புலவர் பின் வருமாறு சித்திரிக்கின்றார்.

"நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்."

முரடர்கள் எப்பொழுதுமே பின்வரும் விளைவைக் கவனியாதே காரியத்தில் இறங்குவர். இதே நிலையில் முரட்டுத்தனமுள்ள, பயமே இன்னதென்று அறியாத, வலிய விரல்களையுடைய ஒரு குரங்குக்குட்டி மலையின் கண் உறவுள்ள இனிய தேன் கூட்டைக் கலைத்துக் களிப்படைந்தது. இதனால் கலைக்கப்பட்ட ஈக்கள் கிளர்ந்து எழும்பி அதனை மொய்த்துக்கொள்ளவே, அது வெருவி நீண்ட மரக்கிளையிற் பாய்ந்தது. இதனைக் கபிலர் கவியோவியமாகத் தீட்டியுள்ளார். அது பின் வருமாறு :

“ கருவிரன் மந்திக் கல்லா வன்பற
ழுருவரைத் தீந்தே னெடுப்பி யயலே
துருகெழு நெடுஞ்சினைப் பாயும்.”

மேலும் இப்புலவர் வேறொரு இடத்தில் அவரையை நிறையத் தின்ற மந்தியின் வயிறு பண்டவணிகரது பை போலத் தோன்றும் என்று கூறி இருப்பதுவும் இன்பம் பயப்பதாகும்.

## உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு

இது தண்டமிழ் நாட்டுப் பழமொழிகளில் ஒன்றாகும். சிறந்த உணவினை வயிறு நிறைக்க உண்டபின்னர் மயக்கம் ஏற்படுதல் இயற்கையாகும். இதேபோன்று தேனை உண்ட மந்தியின் மயக்கத்தினைக் கபிலர் பின்வரும் காவியமாகத் தருகின்றார்.

“ பழுத்து விளங்கும் பலா மரங்களும் வாழை மரங்களும் நிறைந்த அம்மலையில் அப்பழங்களில் முதிர்ந்த தேன் ஒழுகி, அருகிலிருந்த சுனையில் கலந்தது. இதுகால் கடுவனொன்று அங்கு வந்தது. அதற்கு நீர் வேட்கை அதிகமாகவே தேனென்று தெரியாது அச்சுனைநீரைப் பருகி மயங்கிற்று. அருகில் மணம்கமழும் சந்தன மரம் நின்றது. அதில் ஏறவேண்டுமென்பது அதனது அவா. ஆனல் உண்ட மயக்கம் அதன்மீது ஏறி இனிது தங்குவதற்குத் தடை விதித்தது. எதிர்பாராத இன்பத்தில் மயங்கிய குரங்கு இனிச் செய்வதொன்றும் அறியாது, அங்கேயே தரையில் விழுந்து இனிமையுடன் விளங்கும் பூப்படுக்கையின் மீது துயில்கொண்டது.” இதனை விளக்கும் பாடல் கீழே தரப்படுகின்றது.

“ கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த

“சாரற் பலவின் சுளையொடு ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்.”

## விளையாட்டு வீரர்கள் (Sports men)

விளையாட்டில் விருப்பமுள்ள முசுவின் குருளை பாறையில் மயிலீன்ற முட்டையை அதன் அருமை தெரியாமல் உருட்டி விளையாடும் காட்சியினையும், சிறிய கோலைக் கொண்டு [illegible] பாறையிடத்து மழையிலுண்டாகிய பொய்கையினை அடித்து இன்புறும் கடுவனையும் இலக்கியத்தில் காணலாம். மேலும் ஆண் குரங்கொன்று மரத்தின் கொம்பிலிருந்து பழங்களை உதிர்ப்பக் கீழிருந்து மந்தியும் குட்டிகளும் பொறுக்கித் தின்னும் எனக் குறுந்தொகையில் புலவர் கூறியிருப்பதும், நெய்தல் நிலத்துக் கடற்கரையில் திரட்டிய உப்பை வண்டியிலேற்றிவிட்டு வீடு திரும்பும் உமணர்கள் உடன் கொண்டுவந்த குரங்குக்குட்டி அவர்களது குழந்தைகளோடு கிளிஞ்சலுக்குள் முத்தைப்போட்டு “கிலுகிலு” ஆட்டி விளையாடும் எனப் பத்துப் பாட்டில் கூறியிருப்பதும் படித்து இன்புறுதற் குரியனவாகும்.

## மான்

முல்லை நிலத்துக்குரியதாகப் பேசப்படும் விலங்குகளில் மானும் ஒன்றாகும். புலவர்கள் ஆண் மானைக் கலை, இரலை எனவும், பெண் மானைப் பிணையெனவும், குட்டியினை மறி எனவும் வழங்குவர். மேலும் இதனது அடியினை அம்பின் இலக்கு உவமையாகக் கூறுவர். புள்ளியினை உடைய மான் புகரி என்று வழங்கப்படுகின்றது. புகர்

என்பது புள்ளி எனப் பொருள்படும். உழுந்து, வரகு, அறுகு, மரல், பயறு முதலியன மானின் உணவுப்பொருள்களாகும்.

ஆண் மான் நெறிந்தும் திரிந்தும் கவைத்தும் விளங்கும் கொம்புகளைக் கொண்டிருக்கும். கானவர் மானினை அம்பெய்துகொன்று அதனது இறைச்சியை உணவாகவும் தோலினை உடையாகவும் கொள்வர்.

**மான்களின் காதல் திறம்**

வலிய வேய்வாடும் கொடிய காட்டில் நிழலின்றி இரண்டு மான்கள் தவிக்கின்றன. ஒன்று ஆண் மான், மற்றொன்று மடப்பிணை. தன் காதற் பிணை நிழலில்லாத காரணத்தால் மிகவும் வாடிப்போகும் என்று கருதிய ஆண் மான் எப்படியாவது ஒரு மரத்தடியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று படாதபாடுபட்டது. ஆனால் அது முடியாமற் போகவே ஆண் மான் தன் நிழலைக் கொடுத்து நின்றது. இக் காட்சியினை,

> " இன்னிழல் இன்மையான்
> வருந்திய மடப் பிணைக்குத்
> தன் நிழலைக் கொடுத்தளிக்கும்
> கலையெனவும் உரைத்தனரே "

எனப் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

**கற்றோர் ஏத்தும் கவரிமான்**

மான்களில் ஒன்றான கவரிமான் மானத்திற் சிறந்ததாகப் பேசப்படுகின்றது. சிறந்த மானமுடையவர்களைப்பற்றிக் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானம்

அரிய நேர்ந்தால் உயிரையும் விட்டுவிடுவர் என்ற கருத்துப்பட,

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

என்று பாடியுள்ளார்.

## ஆண் மானின் தவிப்பு

பெண் மான் ஒன்று வேடன் ஒருவனால் வீழ்த்தப்பட்டது. ஆனால் அதன் குட்டிகளோ துன்பம் அறியாமல் துள்ளிக் குதித்து விளையாடின முறுக்கேறிய கொம்புடைய ஆண் மான் இருதலைக்கொள்ளி எறும்புபோல் விளங்கியது. தன் துணையை இழந்த வருத்தம் ஒரு பக்கம் வாட்டிப் பிழிய, மற்றொரு பக்கம் அன்னையை இழந்தோமா என்றும் அறியாத நிலையில் துள்ளிக் குதிக்கும் குட்டிகளின் காட்சி நிலை தடுமாறச் செய்கிறது. பாவம்! அதனது வேதனை அளவிடற்கரியது. உணவு உட்கொள்ளாது, நீர்கூட அருந்தாது இரலை தன் துணையை எண்ணி எண்ணி ஏங்கி நின்றது. இதனை,

" செவ்வாய்ப் பகழிச் செயிர் நோக்கு ஆடவர்
கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்
குறுநெடுந்துணைய மறிபுடை ஆடப்
புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை
மேய் பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
நெய்துலம் படுவில் சில்நீர் உண்ணாது
எஃகுறு மாந்தரின் இனைந்து கண் படுக்கும்."

என அகநானூறு எவர் இதயத்தையும் உருக்கிவிடும் வகையில் எடுத்துரைக்கின்றது. மற்றோரிடத்தில் பேய்த்தேரை நாடி நீர் வேட்கைகொண்டு ஓடி ஓடி இளைத்து

ஏமாற்றமடைந்த கலைமான் காட்டில் எங்கோ மேய்ந்து கொண்டிருக்கின்ற தன் துணையை அழைக்கும் காட்சியைக் காணுகின்றோம். களைப்பு மிகுதியாகவே அது மயங்கி விழுந்துவிடுகின்றது ; குரலிலோ தெம்பில்லை. எனினும் அது தன் துணையையே நினைந்து மாறி மாறி அழைக் கின்றது. இதனைப் புலவர் பெருமான்,

" வறல் மரத் தன்ன கவைமருப்பு எழிற்கலை
அறல் அவிர்ந் தன்ன தேர்நசை ஓடிப்
புலம்பு வழிப் பட்ட உலமரல் உள்ளமொடு
மேய் பிணைப் பயிரும் மெலிந்து அழி படர்குரல்,"

எனப் பாடியுள்ளார்.

## ஆமான்

ஆமான் என்ற சொல் காட்டுப் பசுவைக் குறிக்கும். இது அமர்த்த கண்ணையுடையது. கானவரால் விரட்டப் படும் இதனது கன்று அவர்கள் வாழும் ஊரினிடத்தே சென்று அவர்களுடன் பழகி வாழும் இயல்பினது. நற்றிணை என்னும் நூலிலே நம்முடன் ஒன்றி வாழும் விலங்காகிய பசுவைக் குறித்து ஒரு சொல்லோவியம் காணப்பெறு கின்றது.

மாலை நேரம். காலையில் கானகம் சென்று இரை கொண்ட பசுவொன்று வீடு திரும்பியது. ஆனால் அதன் கன்றோ தனது தாயினைக் கண்டுகொள்ளமுடியாது கலங்கி நின்றது. காரணம், தாய்ப் பசு கானகத்தில் மேய்ந்த போது காந்தள் பூவின் மகரந்தப்பொடி அதன் மேனி யெல்லாம் படிந்ததனால் ஏற்பட்ட நிற மாறுபாடே. இதனை ஆசிரியர்,

"சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா
அலங்கு குலைக் காந்தள் தீண்டத் தாது உகக்
கன்று தாய் மருளும்,"

எனக் கூறுகின்றார். இதேபோன்று ஐங்குறுநூறு என்னும் நூலில் தன் கொம்பில் சிக்கிய வெண்மலர்ப் பகன்றைக் கொடியுடன் மாலை வீடு திரும்பிய தாய் எருமையினைக் கண்ட கன்று, தாய் எருமையின் முகத்தைப் பகன்றைக்கொடி மறைத்த காரணத்தால் தன் தாயென்று தெரியாது மருண்டு நின்ற நிலையினைப் புலவரொருவர் பாடியிருப்பது இங்கு எண்ணி இன்புறுதற் குரியதாகும்.

"பகன்றை வால்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்."

## ஏறு தழுவுதல்

காடும் காடு சேர்ந்த பகுதியும் முல்லை நிலம் எனப் படும். இந்நிலத்து மக்கள் தங்களது வீட்டில் பெண் பிறந்ததென்றால் அதனோடு ஒரு காளைக் கன்றையும் கனிவுடன் வளர்ப்பர். சில ஆண்டுகளுக்குப் பின்னர் பெண் பருவமடைந்து பவளப்பதுமையாக விளங்கி ஆயர் கண்களுக்கு விருந்தாவாள். உடன் வளர்த்த காளைக் கன்றும் நன்கு வளர்ந்து 'கொழு கொழு' வென்றிருக்கும். அதனது ஒழுங்காக நீண்டு வளர்ந்த கொம்புகளும், முதுகின்மேல் விளங்கும் பருத்த திமிலும், கழுத்தின் கீழ்த் தொங்கும் அலைத்தாடியும் காண்போர் கருத்தைக் கலங்கச் செய்யும். ஒரு குறிப்பிட்ட நாளன்று 'அக் காளையை எதிர்த்து அடக்குபவனுக்கு என் பெண்ணைக் கொடுப்பேன்!' என்று தந்தை பறை அறைந்து சொல்லச் செய்வான்.

குறித்த நாளன்று ஆயர் வெள்ளம் மந்தையில் திரண்டு விடும். புயபலம் படைத்த வீரர் அனைவரும் நிமிர்ந்த

கண்ணடை போட்டு நிற்பர். பல நிறக் காளைகள் கனல் கக்கி நிற்கும். மலையிடத்தினின்றும் வீழ்கின்ற அருவிகள் போல வெள்ளிய கால்களையுடைய கருமையான ஏறுகளும், அந்தியில் செக்கச் சிவந்து விளங்கும் ஆகாயம்போல அழகிய ஒளி பரந்த வெள்ளைப் புள்ளிகளைக்கொண்ட சிவந்த ஏறுகளும், இறைவன் சூடிய இளைய திங்களைப் போல வளைந்த கொம்புகளையுடைய ஏறுகளும், பொரு கின்ற மாறுபாட்டினையும் வலியினையுமுடைய பிற ஏறுகள் பலவும் 'ஏறுகோள்' பறையின் முழக்கத்தினைக் கேட்டு எக்காளமிட்டு வீரர்களை எதிர்நோக்கி நிற்கும். மணம் வீசும் மலர்களையும், பொன்னொளி வீசும் மகரக் குழைகளை யும் அணிந்து, ஏறு தழுவுதலைக் காணவேண்டி முல்லை முகையினையும் மயிற் பீலியின் மருந்தும் (அடி) நிறைத்தா லொத்த பற்களையுடையராய், பெரிய குளிர்ச்சி பொருந்திய கண்களையுடையராய், தேனினும் இனிய சொற்களையுடை யராய் விளங்கும் மடப்பம் பொருந்திய மங்கையர் பலர் வந்து பரண் மீதேறி அமருவர்.

ஏறுகளைத் தழுவுதற்கு விரும்பிய வீரர் அச்சம் ஏதுமின்றிக் களத்திலே குதிப்பர். ஏறுகளும் அப் பொதுவரைத் தெரிந்து தெரிந்து தன் கூரிய கொம்பு களால் குத்தும். குத்தவே ஏற்றினங்களின் குருதி தோய்ந்த கொம்புகளுடனே இளைஞர் பலரது குடர்கள் சுற்றிப் பிணித்திருக்கும். இதனை,

“ தகைவகை மிசைமிசைப் பாயியார் ஆர்த்துடன்
எதிரெதிர் சென்றார் பலர் ;
கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ் சிறந்து
உருத்தெழுந் தோடின்று மேல் ;
எழுந்தது துகள்

ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்,"

எனக் கலித்தொகைப் பாடலொன்று படம்பிடித்துக் காட்டுகின்றது.

கூரிய கொம்பால் குத்துண்டதால் உடலில் பெருகும் இரத்தத்தால் பிடி. வழுக்குமாகையால் மணலால் கையைப் பிசைந்துகொண்டு மாவீரனொருவன் மீண்டும் களத்துள் புகுந்து ஏற்றினை எதிர்த்து வெகு திறமையாகக் கொம்பு களைப் பற்றி அடக்கிக் காளையின் மீதேறி அமர்ந்து கடலில் கலமிவரும் பரதவரைப் போன்று காட்சி அளிப்பான். இதுகண்ட ஆயர் வெள்ளம் மகிழ்ச்சியில் குரவைக் கூத்தாடும். அடுத்து வெற்றி வீரனுக்கு மணமாலை சூட்டுவாள் மங்கை. இன்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும் வீரன் பகலில் காளையின் கொம்பால் இடியுண்ட உடல் வலியெல்லாம் மறந்து நிற்பான். இவ்வாறு முல்லை நிலத்து மக்களின் வாழ்க்கைக்குத் தேர்வு விளையாட்டாக வும், அதில் வெற்றி பெற்றோருக்குப் பரிசு, காதலாகவும் விளங்கியது வியத்தகு செய்தியாகும். காளைகளை அடக்கி அதன் மீது இவர்ந்த வீரர்களை,

" ........தம் புண்வார் குருதியாற்
கைபிசைந்து மெய்திமிரித்
தங்கார் பொதுவர் கடலுட் பரதவர்
அம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு,"

என்று பரவையில் படகினைச் செலுத்தும் பரதவர்களுக்கு உவமித்திருப்பது நம் உள்ளத்தினைக் கொள்ளைகொள் கின்றது.

## எருமையின் எழிற் சித்திரம்

வளம் கொழிக்கும் வயல் வெளியில் காணும் சேற்றி லேயே கிடக்கும் எருமையொன்று அதனை விரும்பாது ஊரார் உறங்கும் வேளையில் தன்னைப் பிணித்திருந்த கட்டினை அறுத்தெறிந்துவிட்டு அரச நடைபோட்டுப் புறப்படுகின்றது. வழியில் இருந்த கூரிய முள்ளால் ஆகிய வேலியைத் தன் கொம்புகளால் அகற்றிவிட்டுப் பழனத்துள்ளே சென்று அங்கு மலர்ந்து விளங்கும் தாமரையைத் தின்று மகிழ்கின்றது. இக் கண்கொள்ளாக் காட்சியினை விளக்கும் பின்வரும் பாடல் அகநானூற்றிலே காணப் பெறுகின்றது.

"சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும்." (அகம். 46)

இதேபோன்று எருமையைப்பற்றிய பிறிதொரு ஓவியம் அகநானூற்றிலே காணப்படுகின்றது. இரவு முழுதும் சேற்றிலேயே மூழ்கிக் கிடந்த எருமையொன்று காலையில் கதிரவனைக் கண்டதும், சேற்றினின்று எழுந்து, சேற்றிலே வாழும் மீன்கள் சிதையும்படி மிதித்துக் கடுநடை போட்டு எங்கோ புறப்படுகின்றது. அதன் கொம்பிலே பகன்றைக் கொடியொன்று சிக்கிப் பிணைந்து விளங்கு கின்றது. கொடியில் காணும் மலர்கள் வெள்ளைவெளே ரென்று காட்சி தருகின்றன. இவ்வாறு வரும் எருமை யானது போருக்குப் புறப்பட்டுச் செல்லும் புது வீரன் போன்று காணுகின்றது என்று ஆசிரியர் கூறியிருப்பது நமக்கு ஓர் நல்விருந்தாகும்.

## ஆடு

ஆட்டினைப் பற்றி விரிவாக ஏதும் ஒன்றும் கூறப் பெறவில்லை. ஆனால் ஒரு புலவர் ஆட்டு மந்தையைக் கொக்கின் கூட்டத்திற்கு உவமையாக ஓரிடத்தில் குறிப் பிடுகின்றார். குறிஞ்சி நில மக்கள் தங்கள் கடவுளாகிய குமரனுக்கு எடுக்கும் விழாவில் வெறியாடுங்கால் ஆட்டுக் குட்டியினைப் பலி கொடுத்தனர் என்பது தெரிய வரு கின்றது. சிறிய தலையை உடைய வெள்ளாட்டினை மக்கள் வெள்ளை என்று அழைத்தனர்.

## நீர் வாழ் விலங்குகள்

நீரில் வாழும் பறவைகளைப் போன்றே நீரில் வாழும் விலங்குகளும் உள்ளன. மீன், முதலை, தவளை, ஆமை முதலியன இவ்வினத்தைச் சாரும். மீன்களிற் பலவகை உண்டு. அயிரை, கயல், இறா, ஆரல், கெண்டை, சுறா, வாளை எனப் பல்வகை மீன்கள் நூல்களிலே பேசப் படுகின்றன. மீன் நெய்தல் நில மக்களுக்கும் பாணர் களுக்கும் சிறந்த உணவாகப் பயன் பட்டு வந்தது. கல மிவர்ந்து கடலிற் சென்று தூண்டி லெறிந்தும், வலை வீசி யும் மீன்களைப் பிடித்து வந்து அவற்றை விற்று வயிறு வளர்த்தனர் நெய்தல் நில மக்கள். மீன்களில் அயிரை மீனையும், ஆரல் மீனையும் நாரை உண்ணும். நீர் நிறைந்து காணும் பொய்கைகளிற் பெரிதும் காணப்படும். ஆரல் மீனின் முட்டை மிகச் சிறியதாய் ஞாழற் பூவைப் போன்று தோன்றும். வளைந்த காலையும் உடலையும் உடைய இறா மீன் கழிகளில் வாழும். இதனை இற வெனவும் கூறுவர். புலவர்கள் இதனை அன்றிலின் வளைந்த வாய்க்கு உவமையாகக் கூறுவர். கடலில் வாழும் சுறாமீன் மிக்க வலிமையுடையதாகும்; நீண்ட

கொம்பை உடையதாகும். இதனை வலையாற் பிடித்தல் மிகக் கடினம். எனவே பரதவர் எறியுளியினை எறிந்து குத்திக் கொல்வர். கொம்பையுடைய இதனைக் கோட்டு மீனென்று கூறுவர். தனது கொம்பினால் வலைஞரை எறிந்து புண் படுத்தும் ஆற்றல் உடைய இதனை இதனது வலிமை கருதி வயச் சுறா என மொழிதலும் உண்டு. நீர் நாய்க்கு உணவாகும் வாளை என்னும் மீன் சிறிய நீர் நிலைகளிலும், பொய்கைகளிலும் வாழும். இது மாம் பழத்தை உண்ணுமென்றும், இதன் பெண்ணை நாகென்பது மரபு என்றும் தெரிய வருகின்றது. கயல் மீனைப் பற்றிப் பாடாத புலவரே இல்லையெனக் கூறலாம். பெண்களது கண்களைப் பற்றிக் கூறும் பொழுதெல்லாம் கயல் மீனையே உவமையாகக் கூறியுள்ளனர். ஒன்றையொன்று பொரும் இணைக் கயலை மகளிர் கண்களுக்கு ஒப்பாக மொழிவர். பொய்கையில் வாழ்வதும், பிரப்பம் பழத்தை உண்ணுவதுமாகிய யெண்டை மீன் நாரைக்குச் சிறத்த உணவாகும்.

மீனைப் பற்றிய சொல்லோவிய மொன்றினை நம்மால் அகநானூறு என்னும் நூலிலே காண முடிகின்றது. கலமிவர்ந்து நடுக்கடலில் சென்று கொண்டிருந்த பரதவரிடம் பெரிய மீனொன்று எவ்வாறோ சிக்கிக் கொண்டது. தப்பிவிட முயன்ற அதனை விடாமல் பிடித்துவிட எண்ணிய பரதவர் முன்னர்ச் சொல்லப்பட்ட 'எறிஉளி' என்னும் கருவியினை எறிந்து அதனைக் குத்திக் குதூகலித்து நின்றனர். ஆனல் அப்பெரு மீனே இதனைப் பொருட்படுத்தாது உடலிலிருந்து குருதி யொழுக, தன்னைக் காத்துக் கொள்வதற்காக வேண்டி மீண்டும் போராடத் தொடங்குகின்றது. அங்கு மிங்கும் துள்ளியும், கடல் நீரைக் கலக்கியும் போராட்டம் நடத்திய அம் மீன் இறுதியில் உரன் அழிந்து வரிசையாக உள்ள படகு

களின் அருகிலே ஒதுங்கியது. இவ்வாறு தன் உயிரைக் காத்தற் பொருட்டு மீனொன்று நடத்திய உயிர்ப் போராட்டத்தினை உலோச்சனார் என்னும் புலவர் பின் வருமாறு காட்டுகின்றார்.

" நாறி இறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்உமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்பணி வில்லின் போகிப் பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி உரன் அழிந்து
நிரைதிமில் மருங்கில் படர்தரும் ….. "

நீர் வாழ்வனவற்றில் ஒன்றான ஆமையைப் பற்றி தமிழ்ப் புலவர்கள் பேசுங்கால் ஆமையின் பிள்ளையாகிய பார்ப்பு அதன் தாய் முகம் பார்த்து வளரும் என்றும், 'யாமைப் பார்ப்பினன்ன காமம்' என்றும் கூறியுள்ளனர்.

முதலை என்பது கொடிய விலங்குகளில் ஒன்றாகும். வளைந்த கால்களை யுடையது. இது வாழும் நீர்த்துறையின் அருகே செல்வதற்கு எவரும் அஞ்சுவர். தவளை என்பது நீரிலும் நீரின் கரையிலும் வாழ்வதாகும். இது பாம்பிற்குச் சிறந்த உணவாகும். பாம்பானது இதனை இரையாகக் கொள்ளுங்கால் உடனே விழுங்கி விடாது. அதனது வாயில் தவளையானது சிறிது நேரம் உயிருடன் இருக்கும். அந்நேரத்தில் அது பெரிதும் வருந்தும். இதனை ஒரு புலவர் 'பாம்பின் வாய்த் தேரை போலும்,' எனக் குறிப்பிடுகின்றார். இதில் தவளையின் இனமாகிய தேரை என்பது பேசப்படுகின்றது. இத்தேரை பகுவாயை உடையது; தட்டைப் பறையைப் போல ஒலிக்கும்; சுனைகளில் வாழும். தாய் சாகுமாறு பிறக்கும் நண்டும், பிறந்த பார்ப்பினைப் பெற்ற முதலையே தின்னும் அன்பின்மையும் ஒரு புலவரால் பின் வருமாறு கூறப்படுகின்றது.

" தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர் "

# 3. பறவைகள்

## பறவைகளின் பொதுப் பண்புகள்

விலங்குகளைப் பற்றி விளக்கமுறப்பாடியிருப்பது போலவே நம் பைந்தமிழ்ப் புலவர்கள் பறவைகளைப் பற்றியும் பலபடப் பாடியுள்ளனர். அன்றில், அன்னம், எழால், கணந்துள், காக்கை, கிளி, குயில், குருவி, குறும்பூழ், கூகை, கொக்கு, கோழி, நாரை, நுளம்பு, பருந்து, புறு மகன்றில், மயில், யானையங்குருகு, வங்கா, வண்டு, வெளவால் முதலியன தமிழ் நாட்டுப் பறவைகளாகும். பறவைகள் ஓரிடத்துத் தமக்கு வேண்டிய உணவு கிடைக்காவிடின் தம் கூட்டையும் உறையும் காட்டையும் நீங்கி வேறிடத்திற்குச் செல்லும். மேலும் இவைகள் பழம் உண்ணும் பொருட்டுப் பழுமரம் நாடிச் சென்று திரும்புதல் வழக்கமாகக் கொண்டுள்ளன. இது போன்றே பண்டைக் காலத்தில் பசுந் தமிழ்ப் புலவர்களும் வரையாது வழங்கும் வள்ளல்களை நாடிச் செல்லுதல் மரபாகும். இதனை,

> 'பழுமரம் உள்ளிய பறவையின் யானும்,'
> 'பழு மரம் தேரும் பறவை போல,'

என்பவற்றால் அறியலாம்.

பறவைகள் அதிகாலையிலேயே துயில் நீங்கி பல்வகை இசைக் கருவிகள் ஒருசேரச் சேர்ந்து ஒலித்தல்போல இன்னிசை எழுப்பி எங்கும் சென்று பழங்களையும் பல்வகை மலர்களின் தாது, தேன் முதலியவற்றையும் அருந்தி அகமகிழும் தன்மையன ஆகும். மாலையில் புட்கள் தம் கூடுகளுக்குத் திரும்பி ஓய்வு எடுக்கும். மாலையில் திரும்பும் பொழுதும் பறவைகள் ஒலிக்கும். மேலும் வானம்

கருத்தாலும் புள்ளினம் பேரொலி செய்து ஆரவாரிக்கும். பறவைகளில் பல ஆலமரம், புன்னை மரம், மருத மரம் இவற்றிலேயே கூடுகட்டி வாழும். பறவைகளுக்கு மீன் சிறந்ததொரு உணவுப் பொருளாகும். முற்றங்களில் உலர்த்தப்பட்டிருக்கும் மீன்களைப் புட்கள் கவர்ந்து சென்று உண்ணும்.

## பாவலரும் பறவைகளும்

மனிதனுக்குள் பறவை போல்வர் கலைஞனும் புலவனும். டார்வின் கொள்கைப்படி விலங்குகளிலும் பறவைப் பண்புடையன உண்டு. பறவை உடலோடு பறக்கும்; மனிதன் உடல்விட்டுப் பறப்பான். சிட்டுக் குருவி, பருந்து இவை இரண்டும் பறப்பதில் வேற்றுமை இருத்தல்போல மனிதன், புலவன் இவர்களிடையே வேற்றுமை உண்டு. புலவன் கற்பனைச் சிறகின் துணை கொண்டு வான முகட்டையும் தாண்டிச் செல்லும் ஆற்றல் பெற்றவன். இருந்த இடத்தில் இருந்து கொண்டே காடு, மலை, நாடு, வான முகடு இவற்றிற்கெல்லாம் சென்று திரும்பிவிடுவான்.

தமிழ்ப் புலவர்களும் பறவைகளும் என்பது குறித்து எண்ணுதற்கு முன்னால், ஆங்கிலப் புலவர்கள் பறவைகளைப் பற்றி எவ்வாறு பாடியுள்ளனர் என்பது குறித்து ஒரு சிறிது காண்போம். 'நைட்டிங் கேல்', 'ஸ்கைலார்க்' என்ற இரண்டு பறவைகளுமே ஆங்கிலப் பாடல்களில் பெரிதும் பேசப்படுகின்றன. ஆங்கிலப் புலவர்கள் பறவைகளைப் பற்றிப் பாடியிருக்கும் பாக்களை நாம் படிக்கும் நேரத்தில் அவர்கள் பறவைகளைப் பார்த்து ஏதோ பொறாமை உணர்ச்சியுடன் வியந்து பாராட்டியுள்ளனர் என்ற எண்ணம் நமக்கு எழுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக கீட்ச என்னும் புலவர் எழுதிய 'நைட்டிங் கேல்'

என்னும் பாடலையும் செல்லி என்னும் புலவர் எழுதிய 'ஸ்கைலார்க்' என்ற பாடலையும் கூறலாம். புரட்சிக் கவி பாரதியாரின் குயில் பாட்டும் இத்தகையதே. ஆனால் சங்க இலக்கியப் புலவர்களிடம் இத்தகைய உணர்ச்சி அறவே கிடையாது. வீடு, நாடு அதாவது அகம், புறம் என்று வரையறுத்துப் பாடியதே இதற்குக் காரணமாகும். அன்புடை ஐந்திணை கூறும் ஐங்குறுநூறு என்ற எட்டுத் தொகை நூலில் கபிலர் பாடிய மயில், குயில் வெள்ளாங் குருகுப் பத்தில் முதலிடம் வாழ்க்கைக்கும், பின்னணி இயற்கைக்கும் கொடுத்துப் புலவர் மறைந்தே காணப் படுகின்றார். ஆனால் ஆங்கிலப் புலவர் செல்லி (Shelley) இதற்கு நேர்மாறாகத் தன்னை நினைந்தே பாடுகின்றார். பறவைகளை வியத்தல் மாத்திரம் ஆங்கிலப் புலவர்களிடம் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் ஆங்கிலப் பாடல் இனிது விளக்கும்.

"Teach me half the gladness
That thy brain must know
Such harmonious madness
From my lips would flow
The world should listen then as I am
listening now." (Skylark)

இதன் பொருளாவது,

" உன் உள்ளம் அறிந்த இன்பத்தில் பாதியை
மாத்திரம் எனக்கு நீ கற்பித்தால்
என் உதடுகளில் மட்டில்லா இன்பப் பைத்தியம்
மடை கடந்தோடும்;
அதை நுகரும் உலகு நான் இப்பொழுது
உன் இசையில் ஈடுபட்டிருப்பது போல்
என்னில் ஈடுபடும்."

தமிழ்ப் புலவர்கள் நிலத்திற்கேற்ற பறவைகளின் வாழ்க்கையைக் கண்டு தான் அதற்கேற்ற ஒழுக்கம் வகுத்தனர் போலும். காதல் வாழ்வில் நெறிமுறைக்குப் புலவர்கள் பறவைகளையே நோக்கினர். இத்தகைய ஒழுங்கு ஆங்கிலப் புலவர்களிடம் அணுவளவேனும் இல்லையென்று கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டாக ராபர்ட் லிண்ட் (Robbert Lind) என்னும் ஆங்கிலப் புலவர் இயற்கையை ஒட்டிக் கடற்கரையினைப் பாடாதிருப்பதைக் கூறலாம். வாத்தின் 'டக் டக்' என்னும் நடையொலி தவிர வேறொன்றும் அவரால் பேசப்படவில்லை.

குறுந்தொகை என்னும் எட்டுத் தொகை நூலில் நெய்தல் நிலத்தில் வாழும் காக்கை தூங்குவதற்கு அலையொலி உதவி புரிந்ததென்றும், தேர் கரடு முரடான நிலத்தில் ஓடுதல்போல நாரை நெய்தல் நிலத்தில் ஓடுமென்றும் தமிழ்ப் புலவர்கள் நிலத்திற் கேற்றவாறு கூறியிருப்பன மிகவும் இன்பம் பயப்பனவாய் உள்ளன.

புலவர்களின் புலன்கள் நன்கு தீட்டப் பெற்றவை. கண்ணும் காதும் சிறப்பாக நுட்பமானவை. கண்ணை வளர்த்த புலவர்களே மிகுதி. அசைவு, ஒலி, உருவம் என்ற மூன்று பேரழகுகளைக் கண்டும் கேட்டும் இன்புற்றனர். பார்வை, பறத்தல், நடத்தல் ஆடல் இவற்றால் அழகு அமையப் பெற்றிருப்பதைப் புலவர்கள் பறவைகளிடம் கண்டனர். இவ்வுண்மையினைப் பின்வரும் வரிகள் நன்கு வலியுறுத்தும்.

'வாவு பிறை வெளவால்'
'ஞமன் பறை நாரை'
'துள்ளு நடைக் குருவி'

பறவைகளெல்லாம் எல்லாத் தொழிலும் துணையாகவே இருக்கும்; மிருகங்கள் இவ்வாறில்லை, எனவே சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காதல் வாழ்விற்குப் பறவைகள் எடுத்துக் காட்டாகக் காட்டப்படுகின்றன. மயில், குயில், கிளி இந்த மூன்று பறவைகளும் வாழ்விற்குத் துணையான காரணத்தால் அவைகள் மிகுதியான பாடல்களில் பேசப்படுகின்றன.

## குறிஞ்சிநிலப் பறவைகள்

## ஆடும் மயில்

இயற்கை வளம் செறிந்தது மலை. எங்கும் ஓங்கி வளர்ந்து அசைந்தன மூங்கில்கள். அம்மூங்கில்களைப் பல இடங்களில் வண்டுகள் துளைத்து விட்டன. மேல்காற்று மென்மையாக வீசிற்று. மேலும் அக்காற்று மூங்கிலில் உள்ள துளைகளின் வழியே செல்லவே, அதனால் இனிய ஓசை எழுந்தது. இவ்வினிய இசை குழலிசை போன்று விளங்க, வான் முகடுகளினின்றும் முடுகி இடியென எழுந்து வீழும் சாரல்கள் பின்னர் பரலையும் அறலையும் அரித்தரித்துப் பளிங்குருகிப் பாய்மா போல் இழிதரும் நீர் வீழ்ச்சியாகி, கற்களை உருட்டிக் கொண்டு 'டம் டம்' என்னும் பெரு முழக்கத்துடன் விழுவதால் ஏற்படும் ஒலியானது முழவொலி போன்று முழங்கிற்று. கண்ணுக்கினிய கலைமான் கூட்டம் தாழ ஒலிக்கும் கடிய குரல் வங்கியம் போன்று இன்னிசை எழுப்பிற்று. மலைப் பூஞ்சாரலில் வண்டுகள் எழுப்பும் ஒலியானது யாழொலிபோல் எங்கும் கேட்டது. இவ்வாறு வேய்ங்குழல், நீர் முழவு, வண்டு யாழ், மான் தூம்பு ஆகிய இன்னிசைக் கருவிகள் இசைக்க, ஆடலிற் சிறந்த ஆரணங்கு போன்று அங்கு பயில்கின்ற மயிலொன்று இயலி ஆடிற்று. இவ்வாட்டினை மந்திகளாகிய அவையோர் மருண்டு நோக்கினர். மந்தி

மாந்தர் கண்டு களிப்பதோடு நில்லாது, அறிவுடைக் கேட்போராகவும் (critical audience) விளங்கினர். இக்கண்கொள்ளாக் காட்சியினைக் கன்னித் தமிழ் பாடிய கபிலர் சுவையோவியமாகத் தருகிறார். அது வருமாறு:

'ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடு அமை முழவின் துதைகுரல் ஆகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல் அவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்
விழவுக் களவிறலியில் தோன்றும்.'

இதன் மூலம், இயற்கையில் பாட்டுண்டு, கூத்துண்டு, முழவுண்டு, குழலுண்டு, எல்லாம் உண்டு என்று புலவர் உணர்த்தியிருப்பது நம் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொள்ளுகின்றது. அடுத்து ஆடும் மயிலின் மாண்பினைக் காண்போம்.

அழகான தோகையும், சாயல்மிக்க நடையும் உடைய மயில் வேங்கை மரத்தில் தங்கி பாறைகளில் முட்டையிட்டுத் தினைக் கதிரை உண்டு திரியும் என்று இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. நீல வண்ணமுடைய எழில் மிக்க கழுத்தையும், அழகிய பீலியையும், நீல மணிபோன்ற புள்ளிகளையும், குடுமியையும் உடைய மயில், கற்பாறை மீதமர்ந்து தன் கூட்டத்தோடு காலை இளம்பரிதியின் வெப்பத்தைத் துய்க்கும் காட்சியும், சோலையில் சென்று உலவும் காட்சியும், இனிய தீங்குரல் எழுப்பி தாளம்

தவறாது ஆடும் காட்சியும், வானிலிருந்து இழியும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

அழகு மிக்கதும் 'பள பள' என ஐவகை வண்ணமும் கொண்டதுமாகிய மயிலினைக் குறித்துப் பேசாத நூல் தமிழ் மொழியில் இல்லையென்றே கூறலாம். மயிலினை மகளிரது மென்மைக்கும், அதன் கலாவத்தை மகளிரது கூந்தலுக்கும் அதன் குடுமியை வாகைப் பூவிற்கும், அதன் காலை நொச்சி இலைக்கும் ஒப்பிட்டுப் புலவர்கள் பாடியுள்ளனர். ஆண் மயிலே தோகையுடன் காண்போர் கருத்தைக் கவரும் வகையில் விளங்கும். பெண் மயிலுக்குத் தோகை கிடையாது. ஆணுடன் பெடை இருந்தால் ஆண் மன எழுச்சியோடு ஆரவாரித்து எழிலுற விளங்கும். நம் புலவர் பெருமக்கள் மகப்பேறு பெற்ற மங்கையரைக் குறித்து எழுதும் போதெல்லாம் மயிலையே உவமங் காட்டிக் கூறுதல் மரபாகும். இதனது அழகை 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ?' எனக் குறள் வியந்து பாராட்டுகின்றது.

மயில் ஒருவகையில் தமிழ்நாட்டு மக்களுக்குப் பருவம் உணர்த்தும் பட்டியாக உதவி புரிந்தது என்று கூறலாம். காதலர்க்குக் களிப்பூட்டும் கார்காலத்தினை மக்கள் மஞ்ஞை ஆடுவதைக் கொண்டே அறிந்து அக மகிழ்ந்தனர். ஏனெனில் கார்காலத்தில்தான் மயிலானது ஆரவாரித்துக் கருமேகத்தினைக் கண்டு களிப்புற்றுக் கான் யாற்றங் கரையில் கண்டோரைக் கவரும் வகையில் ஆடும். முகிலினைக் கண்டவிடத்து மஞ்ஞை களிப்பினால் ஆடி மழை வருவதை முன்னதாகவே மக்களுக்கு அறிவிக்கும். கவினுறு கழனிகளில் திரியும் மயில்கள் உழவரது முழவொலியை முகில் முழக்கமெனத் தவறாகக் கொண்டு களிப்பின் மிகுதியால் ஆடும் என ஐங்குறுநூறு கூறுகின்றது.

மயக்கும் மயிலைக் காணும்போதெல்லாம் நாம் பெண்மையின் வண்மையை உண்மையாகவே உணர முடிவதால் ஒல்காப் புகழுடைய தொல்காப்பியனார் பிற பறவைகளுக்கெல்லாம் உரிய பொது ஆண்பாற் பெயராகிய 'சேவல்' என்பது மயிலுக்குப் பொருந்தாது எனக் கொண்டு,

'சேவற் பெயர்க் கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே'

எனக் கூறியுள்ளார். இதற்கு உரை எழுதிய பேராசிரியரும் 'மாயிருந்தூவி மயின் என்றதனல் அவை தோகை உடையனவாகிப் பெண்பால் போலும் சாயல ஆகலான் ஆண்பாற் தன்மை இல என்பது கொள்க' எனக் கூறியுள்ளார்.

இதனைக் குறித்துப் பாடிய தமிழ்ப் புலவர்கள் 'இது குறிஞ்சியிலும் முல்லையிலும் வாழும் என்றும், இதனை வலையமைத்துப் பிடிக்கலாம் என்றும், இது கனத்த உடலையும் வலிமையற்ற இறக்கைகளும் கொண்டிருப்பதால் மிக உயரப் பறப்பதில்லை என்றும், பாம்புக்கும் இதற்கும் மிகு பகை உண்டென்றும், இதனைக் கண்டு அஞ்சும் பாம்பு தன் நஞ்சுடைத் தலைப் படத்தை விரித்துச் சீறி எழுமென்றும், சோழி போன்ற வெள்ளிய இறகுக் காம்பை உடைய பீலியை மயில் தானே களைந்து விடுமென்றும், மாமரத்தின் கிளைகளில் இது மகிழ்ச்சியுடன் தங்கும் என்றும் கூறி உள்ளனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மயிலே நந்தமிழ்க் கடவுளாகிய குமரனின் வாகனமாய் இலக்கியங்களில் கூறப்படுகின்றது. மேலும் தமிழகம் வாணிகம் செய்த பொருட்களில் மயில் தலையாய ஒன்றாகும். வண்டி வண்டியாய்

மயிலிறகு ஐரோப்பிய நாடுகளுக்கு (ரோம், எகிப்து, யவன நாடுகள்) அன்று ஏற்றுமதி செய்யப்பட்டது. கடையேழு வள்ளல்களில் ஒருவனான பேகன் வரலாற்றில் இடம் பெற்றதற்குக் காரணமாக இருந்தது மயிலே அருளுணர்வுடைய பேகன் குளிர்காலத்தில் தோகை விரித்து ஆடிய மயிலினைக் கண்டு இரங்கி அது குளிரால் வாடி ஆடுகின்றது என மனத்திலே கொண்டு அதனது குளிரை நீக்குதற் பொருட்டுத் தன் பொன்னுடையைப் போர்த்திப் புகழ் பெற்றனன் அன்றோ! 'மயிலே, மயிலே, இறகு போடெனில் போடுமா' என்று தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி, தானே கனியாத செயலை நாமே முயன்று கனிவிப்பதே முறை என்ற உண்மையை உணர்த்துகின்றது.

## கொஞ்சு மொழி அஞ்சுகம்

கொஞ்சு மொழி அஞ்சுகம் மயிலைப் போன்றே குறிஞ்சி நிலத்திற்குரிய பறவையாகும். பேசும் திறமும், அழகும், சிவந்த வளைந்த கூரிய அலகும், கழுத்தில் அழகிய கருவளையமும், மென் குரலும் உடைய இப்பறவையினை மங்கையர் கூட்டிலடைத்து வீட்டில் வளர்த்து மகிழ்வர். இதனது பசுமை வண்ணமும், செக்கச் சிவந்து விளங்கும் வாயும், இனிய குரலும் இன்பத்தைத் தருவனவாகும். பசுமை நிறக் கிளி தவிர, வெண்ணிறக் கிளியும், ஐந்து நிறக் கிளியும் உள்ளன. இவைகள் தோட்டங்கள், வயற் பகுதிகளில் விளைந்து காணும் கதிர்களைக் கொணர்ந்து உண்ணும். பைந்தமிழ் நாட்டுப் பாவையர் பண்டு தினைப் புனம் சென்றது, அதனை நாடிவரும் கிளிகளை ஓட்டுதற்கே. கிளிகள் புனத்தில் பெடையோடு 'கீச்சுக் கீச்செனக்' கூவிச் சுற்றித் திரிந்து கதிர்களைக் கவரும். தினைப் புனம் காக்கும் கன்னியர் பாட்டுப்பாடி கிளியோட்டுவர். அவரை

யையும் தினையையும் கிளிகள் விரும்பி உண்ணும். கிளிகளின் உறைவிடம் பெரும்பாலும் மரப் பொந்துகளே. இவைகளில் உருவிற் சிறியனவும் பெரியனவும் உள இதனது வளைந்த அலகிற்குக் கைவிரல் நகமும் அவரை மலரும், இதனது மூக்கிற்கு அழகிய பெண்களின் கூரிய உகிரும் மாங்காயும் ஒப்பிடப்படுகின்றன. மடக்கிளியின் சிறகுகள் மங்கையர் மனத்தைக் கவரும் வகையில் அழகுற விளங்குகின்றன.

பிற்காலப் புலவர்கள் கிளியினைத் தூது விடுவதாகச் செய்யுளியற்றல் மரபாகும். மேலும் மற நெறியில் நின்று மனமாற்றம் அடைந்து அருள் நெறியில் திளைத்துக் குமரன் அருள்பெற்ற அருணகிரிநாதர் கிளி வடிவெடுத்து அக்குமரனின் தோள் மீதமர்ந்து உலகில் நடப்பவைகளை உடனுக்குடன் முருகனது செவியில் சொல்லுகின்றார் என்ற ஐதீகமும் தமிழ் நாட்டில் நிலவுகின்றது.

அஞ்சுகம் அன்றும் இன்றும் நம்முடன் ஒன்றிவாழும் பறவையாகும். மங்கையர் இதனுடன் தோழமை பூண்டு பேசியும் மகிழ்வர். 'சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை' என்பது பண்டு தொட்டு வழங்கிவரும் பழமொழியாகும். எனவே சில மகளிர் எப்பொழுதும் கிளியினைத் தம் அருகே வைத்துப் பேசி மகிழ்வர்; பாலும் பழமும் சோறும் ஊட்டி வளர்ப்பர். இரவில் தலைவனும் தலைவியும் கூடுங்கால், அவர்கள் காதல் மிகுந்து மனங் கனிந்து முறை பிறழ்ந்து பேசியதை, பகலில் கிளி சொல்லத் தொடங்க, அதனைக் கேட்ட தலைவி நாணி, அக்கிளியினை மேலே பேசவிடாது அதன் வாயைப் புதைத்தனள் என்று கலிங்கத்துப் பரணியில் காணப்பெறும் செய்தி படித்து இன்புறுதற் குரியதாகும். அப்பாடல் வருமாறு :

'நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிபொற் கபாடந் திறமினோ.'

## பாலை நிலப் பறவைகள்

புறா, பருந்து, எருவை, கழுகு என்பன பாலைநிலப் பறவைகளாகும்.

## புறா

மேற்கூறிய பறவைகளில் புறா காதல் மிக்குடைய பறவையாகும். ஓமை மரம், கள்ளி இவற்றின்மேல் புறா தங்குவதாக பல பாடல்கள் கூறுகின்றன. ஆனால் இன்று புறாக்கள் வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் புறாக்கள் மேன் மாடங்களில் கூடுகட்டி வாழுகின்றன. கோயிலிடத்துள்ள கோபுரங்களின் உச்சியிலும் புறாக் கூடுகளைக் காணலாம். புறாவின் கழுத்திலே புள்ளிகள் உள்ளன. இது குறுக அடியிட்டு நடக்கும். புலவர்கள் இதனது புறத்தை உகாய் மரத்தின் அடிக்கு உவமையாகக் கூறுவர்.

## புறவுக் குடும்பம்

வெட்பம் மிகுந்த பாலை நிலம்; இலை உதிர்ந்த மரங்கள். இச்சூழ் நிலையில் அன்புகொண்ட இளைய பெண் புறாவானது வெப்பத்தால் தளர்ந்து துன்புற்று நிற்கின்றது. இதனைப் பொறுத ஆண் புறா தன் சிறகால் நிழல் கொடுத்து அதனது வருத்தத்தை ஆற்றும். இக் காட்சியினைப் பாலைக் கலியில் நாம் பார்க்கின்றோம்.

'அன்புகொள் மடப்பேடை யசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும் புறவு'

இரை தேடிச் சென்றிருக்கும் ஆண் புறுவானது உரிய காலத்தில் வந்து சேராது போகவே, பெண் புறு பேதுற்றுக் கலங்கி அதனை நினைந்து கூவும் என்று குறுந்தொகை கூறும் செய்தியும், தன் காதலன்புடைய ஆணே பெண்ணை பிரிந்தால் அப்பிரிவினை ஆற்ருது மரக்கிளையில் தனித்திருந்து தனது துணையைக் கூவிக் கூவி அழைத்துக் கத்தும் என்று பத்துப் பாட்டில் காணும் காட்சியும் படிப்போருக்குப் பரவசம் ஊட்டுகின்றன.

## பருந்து

பருந்து பாலை நிலத்திற்குரிய பறவையாகும். இப் பறவை பிணந்தின்னும். சமயம் பார்த்துக் கோழிக் குஞ்சுகளையும் சிறு பறவைகளையும் கவர்ந்து சென்று கொன்று உணவாகக் கொள்ளும் திறனுடையதாகும்.

## பருந்துக் குடும்பம்

நிற்க நிழலில்லாத பாலை நிலம். அதன் நடுவே ஓங்கி வளர்ந்த ஒரு ஓமை மரம். அதன் உச்சியிலே பெரிய கிளையொன்றில் ஒரு பருந்தின் கூடு. பெண் பருந்து குஞ்சு பொரித்திருக்கிறது. மேலும் கூட்டைவிட்டு நீங்காது தன் குஞ்சுகளைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறது பெண் பருந்து. ஆனல் பசியோ வயிற்றைக் கிள்ளுகின்றது. உணவுக்கு என்செய்வது? குடும்பப் பொறுப்பைக் கொண்டுள்ள ஆண் பருந்தோ குஞ்சுகளைப் பெற்றெடுத்ததினல் களைப்புற்றிருக்கும் தன் பேடையினை விட்டுப் பிரிய விரும்பவில்லை. ஆனல் தன் பேடையின் பசித்

துன்பத்தினைக் கண்டு ஆற்ருது. இரை தேடத்துணிந்து புறப்பட்டுவிட்டது ஆண் பருந்து. எங்கெல்லாமோ தேடி அலைந்த அது இறுதியில் ஓரிடத்தில் காட்டு மானின் நாறிய புலாலைக் காணுகின்றது. உடனே அப் புலாலைத் தன் பேடைக்கு உணவாகக் கொண்டு வந்து மகிழ்கின்றது. இவ்வோவியத்தினை அகநானூறு என்னும் நூலிலே நாம் காணலாம்.

"கருங்கால் ஓமைக் காண்புஇன் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை ஈன்றிளைப் பட்ட
கொடுவாய்ப் பேடைக்கு அல்குஇரை தரீஇய
மான்றுவேட்டு எழுந்த செஞ்செவி எருவை
வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குநடை மரைஆ வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி உவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை.
கொள்ளை மாந்தரின் ஆனுது கவரும்."

## உழைப்போர் பயன் சோம்பேறிகளுக்கே !

கற்றோர் ஏத்தும் கலித்தொகை என்னும் நூலில் 'உழைப்போர் பயன் சோம்பேறிகளுக்குக் கிடைக்கும்' என்ற கருத்து, உயர்ந்த இடத்தில் பிரிவற்ற தனிக்கிளை யின் நுனியில் கூடுகட்டி வாழும் பொல்லாத கழுகு தன் குஞ்சுகளுக்குத் தன் வாயிலிருந்த கண்ணுகிய இரையினை ஊட்ட அது குஞ்சுகளுக்குக் கிடையாமல் தவறிக் கீழே விழ, கீழிருந்த நரிக்கு அது கொண்டாட்டமாய் முடிந்தது எனக் கூறப்பட்டுள்ளது.

## காக்கை கரைந்தால்......?

அன்றும் இன்றும் நம்முடன் ஒன்றி வாழும் பறவை யாகிய காக்கை நெய்தல் நிலத்திற்கு உரியதாகவே பெரி

தும் பேசப்படுகின்றது. மரங்களில் கூடுகட்டி வாழும் இக்காக்கை பெரும்பாலும் நம் இல்லங்களைச் சுற்றி எங்கும் நிறைந்திருக்கும். தின்பண்டங்களை நம்மிடமிருந்து திருடி உண்ணுவதில் காக்கையை எப்பறவையும் மிஞ்ச முடியாது. காக்கையிடம் காணும் சிறந்த பண்பாடு அது தன் இனத்தோடு கூடி உண்ணுதலாகும். அண்டங் காக்கை, சிறு கருங் காக்கை என இது இரண்டு வகைப் படும். பின்னதே இலக்கியங்களில் பெரிதும் பேசப்படு கின்றது. இக்காக்கையானது அகப்பொருட் காதலிக்கு நிமித்தம் பார்த்தலாக இலக்கியங்கள் எடுத்தோதுகின் றன. கழுத்திற் சிறிது வெண்மையுள்ள காக்கை சிறு வெண் காக்கை எனக் கூறப்படுகின்றது. உள்வாய் சிவந் திருக்கும் இது கரைந்தால் வீட்டிற்கு விருந்தினர் வருவர் என்று மக்கள் நம்பினர். இன்றையக் கொள்கையும் அதுவே. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ப தனை 'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' என்ற குறுந்தொகை வரி நன்கு வலியுறுத்தும். மேலும் இதன் மூலம் மகளிர் சோற்றைக் காக்கைக்குப் பலியாக இடுதல் வழக்கம் என்பதனையும் அறிய முடிகின்றது.

## மக்களின் மணிப் பொறி ( clock )

பண்டைத் தமிழ் நாட்டில் காலம் காட்டும் கருவியாக ஓரளவிற்குச் சில பறவைகள் விளங்கின எனக் கூறலாம். காலக் கருவியாகச் சேவலும், கோழியும் சங்க இலக்கி யத்தில் சாற்றப்படுகின்றன. இவ்வுண்மையினைப் பின் வரும் வரிகள் எளிதிற் புலப்படுத்தும்.

'வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனர் காப்போ ருணர்த்திய கூஉம்'
'குக்கூ வென்றது கோழி'

புனம் காவல் செய்பவர்கள் பொழுது விடிந்து விட்டதை அறிய கோழி நாட்காலையில் கூவும். ஆந்தையின் அலறலும் அன்றிலின் குரலும் நள்ளிரவாகிய காலத்தினைக் காட்டி காதலைத் தாக்கின. நள்ளிரவில் தலைவன் வரவிற்குக் காத்திருக்கும் தலைவிக்கு ஆந்தையின் அலறல் தலைவன் இடையூறுகளை நினைவூட்டி அச்சுறுத்தும் என்று கூறப்படுகின்றது.

மக்களின் மணிப் பொறிகளில் ஒன்றான கோழி, வீட்டுக் கோழி, காட்டுக் கோழி, நீர்க் கோழி என மூன்று வகைப்படும். மேலும் சம்பங் கோழி, பிற்காலத்தில் தோன்றிய வான்கோழி, கிண்ணிக் கோழி முதலியனவும் இவ்வினத்தையே சாரும். இவற்றுள் வீட்டுக் கோழி பல்வகையிலும் பயனுள்ளது. இது தினையைக் கவர்ந்து துண்ணும். மிகுதியான உயரமும் நெடுந் தொலைவும் இது பறப்பதில்லை. இலக்கியத்தில் ஆண் சேவல் என்றும், பெண் பெட்டை என்றும், குஞ்சு பிள்ளை என்றும் கூறப்படும். சேவல் அழகிய வாலும், செங்காந்தளைப் போல் விளங்கும் கொண்டையும், தாடியும் உடையது. குறுங் கால்களையுடைய பெட்டைக் கோழி எப்பொழுதும் குஞ்சுகளுடனே கூடியிருக்கும். வீட்டுக் கோழி நமக்குப் பேருதவியாக இருப்பதை நாம் இன்றும் காணலாம். இதனைக் கொன்று உண்ணும் பழக்கம் பண்டைக்கால் முதலே இருந்து வருகின்றது என்பதை 'மனைவாழ் அளகின் வாட்டொடு பெறுகுவிர்' என வரும் பெரும்பாணாற்றுப் படை அடியினால் அறிய முடிகின்றது. இத்தகைய கோழியின் உருவினையே நம் குமரனும் தன் கொடியினில் கொண்டுள்ளான்.

நீர்க்கோழி என்பது நீலநிறமுடையதாகும். இதனைச் சம்பங் கோழி என்றும் மக்கள் வழங்குவர். இது முழவின்

ஒலிபோலக் கூவும். இது பெரும்பாலும் பெரிய ஏரிகளி லும், குளங்களிலும், குட்டைகளிலும் உள்ள நீரில் வாழும் புலால் உண்ணுவோர் இதன் கறியைப் பெரிதும் விரும் புவர். இன்றும் ஒரு சில மக்கள் இதனைத் துப்பாக்கியால். வேட்டையாடிக் கொணருவர். இது தண்ணீரில் மூழ்கி மூழ்கிச் செல்லுவதால் இதனைக் கிராம மக்கள் 'முக்களிப் பான்' என்று வழங்குகின்றனர். கழனிகளில் ஆணும் பெண்ணும் ஒன்றாய்த் திரிந்து கத்தும். தாமரை மலர்ந்த தண் தடாகத்தில் கூரிய உகிரையுடைய நீலச் சேவலைப் பிரிந்த பேடை அதையே எண்ணி வாடும் என ஓர் இலக் கியம் இதனைப்பற்றிக் கூறுகின்றது.

பொறிகளையுடைய கழுத்தையும், கவர்த்த குரலையும் உடைய காட்டுக் கோழியைக் கானங்கோழி என்றும், ஆண்டலை என்றும் மக்கள் உரைப்பர். பாலைக் காடுகளில் உறையும் இது நெற்கதிரைக் குத்தித் தின்னும்.

## கோழிக் குடும்பம்

ஒரு கோழி வேலியைச் சார்ந்துள்ள காட்டுப்பூனை நுழைவதைக் கண்டு உயிர் நடுக்குற்றுக் கூவியது. பின்னர் அருகிலிருந்த சேவல் விளித்தது கண்டு அது பயம் தெளிந்தது. இக் காட்சியினை ஆசிரியர் தண் ணாற்பூட் கொல்லனார்,

'ஊர்முது வேலிப்பார் நடைவெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர் நடுக்குற்றுப் புலா விட்டரற்றச்
...................... சேவலிற் றணியும்'
(புறம். 326)

என்று அழகுறக் காட்டுகின்றார். இது போன்றே இன் னும் இரு குடும்பங்கள் பேசப்படுகின்றன.

உருக்கிய நெய்யில் பாலைத் தெளித்தாற் போன்ற வரிக் குரல் மிடறும் பல புள்ளிகளும் உடைய அழகிய சேவல், ஈர மணலிலுள்ள நாங்கூழ்ப் புழுவை எடுத்துக் காலை உணவாகத் தன் பேடைக்கு ஊட்டி மகிழ்ந்தது. பின்னர் தானும் உண்டது. கணவனின் பெருந்தகைமையை எண்ணிய பேடை தன் சேவலை நோக்கி, நோக்கி மகிழ்ச்சியடைந்தது. இக் காட்சியினை நற்றிணை என்னும் நூலில் காணலாம்.

"உருக்கு நறுநெய் பால் விதிர்த்தன்ன
வரிக்குரல் மிடற்ற அந்நுண் பல்பொறிக்
காமரு தகைய கானவாரணம்
பெயல்நீர்போகிய வியன்நெடும் புறவில்
புலரா ஈர்மணன் மலிரக் கெண்டி
நாள் இரை கவரமாட்டித்
தன்பெடை நோக்கிய பெருந்தகு நிலையே"
(நற்றிணை)

இல்லின் கண் உறைகின்ற கோழிப் பெடையானது மாலைக்காலம் வந்ததைக் கண்டவுடனே காட்டுப்பூனைகள் தன் பிள்ளைகளைக் கவருமோ என்ற அச்சத்தினால் கலங்கிப் பாதுகாப்பாகப் புகுதற்குரிய இடத்தை அறியாமல், அவைகள் அனைத்தும் ஒருங்கே கூடும் பொருட்டுக் குஞ்சுகளைத் துன்பத்துடன் அழைத்துக் கூவியது. இங்கு தாய்க் கோழி தன் குஞ்சுகளிடம் கொண்டுள்ள பேரன்பு பெரிதும் போற்றுதற்குரியதாகும். மேலும் தாய்க் கோழி சேய்க்குக் கற்றுக் கொடுக்கும் கல்வியானது இங்கு எண்ணுதற்குரியதாகும். அடுத்து ஆந்தை குறித்து ஆராய்வோம்.

## ஆந்தை

ஆந்தையைப் பற்றி ஏனோ விரிவாக ஒன்றும் கூறப் பெருதிருப்பினும் அதனைப் பற்றிய பின்வரும் செய்தி களைச் செந்தமிழ் இலக்கியங்களிலே ஆங்காங்கே காண முடிகின்றது. இதனைக் கூகை எனவும் குடிஞை எனவும் மக்கள் கூறுவர். இது பட்ட மரங்களிலே காணும் 'பொந்துகளிலும் பாழிடங்களிலும் வாழ்வதாகும்; இர விலே இது பெருங் குரலிட்டுக் கத்தும்; இதனைக் கேட் போர் மிகவும் அச்சம் கொள்வர். ஆந்தையின் அலறல் அன்று தீயசகுனமாகக் கருதப்பட்டது என்பதைச் சீவகன் இடுகாட்டிடத்துப் பிறந்தபொழுது அவன் அன்னை விசையை வருந்தி அழுங்கால் மங்கலமின்றிக் கூகை அலறிற்று என்று ' கூகை குழறிப் பாராட்ட ' என ஆசிரியர் கூறியிருப்பதிலிருந்து அறிய முடிகின்றது. இன்றும் அவ்வாறே மக்கள் கருதுகின்றனர். கூகையி னது உனவு ஊன் உணவேயாகும். வேறொன்றையும் இது உண்ணது.

## அன்றிலும் மகன்றிலும்

அன்றில் நெய்தல் நிலத்திற்குரிய பறவையாகும். இது கருநிறமுடையது. இதன் அலகு வளைந்திருக்கும். இதனது வளைந்த அலகிற்குப் புலர்வர்கள் இருமீனை உவமை கூறுவர். ஆண்பறவையினது உச்சிச்சூட்டானது நெருப்புப்போன்று சிவந்து காணப்பெறும். இதன் குரல் ஊதுகொம்பின் ஒலியை ஒத்திருக்கும். இது தடா, பனைமரங்களில் கூடு கட்டி வாழும். இது ஊர் அரவம் அடங்கிய பின்னர் நரலும். இவ்வொலி கேட்டுத் தலைவி துயருறுவாள்.

நெய்தல் திணை ஒழுக்கமாகிய இரங்கற்பகுதியில் இப் பறவையைப்பற்றிப் பெரிதும் புலவர்கள் பேசுகின்றனர். இதனது கண் பார்வை மாலையில் மங்கிவிடும் என்றும், பெடை மாலை நேரம் வந்துவிட்டது என்பதைத் தனது சேவலுக்கு அறிவித்து அதைத் தன் கூட்டிற்கு அழைக்கும் தன்மையது என்றும் புலவர்கள் கூறியுள்ளனர். மேலும் நீர்நிலையில் உள்ள மீன்களே இதனது உணவாகும் என்றும், இது மெதுவாக அகவும் தன்மை உடையது என்றும், பெடையுடன் கூடுகின்றபோது தன்னுடைய அலகைப் பெடையின் அலகினுள் நுழைத்துக்கொண்டு கூவும் என்றும், காகம், குருகு, தூக்கணங் குருவி என்பவைகள் இதனுடன் சேர்ந்து வாழக்கூடிய பறவை கள் என்றும் இலக்கியங்கள் பகருகின்றன. புலவர்கள் "பாங்கி அருளியல் கிளத்தல்" என்ற துறைக்கு, குருகு, தூக்கணங்குருவி, காக்கை இவற்றுடன் அன்றிலையும் உதாரணமாகக் கூறுவர்.

மேற்கூறிய கருத்துக்களைப் பின்வரும் செய்யுள் பகுதிகள் நன்கு விளக்குகின்றன.

"ஏங்குவயிர் இசைய பெருவாய் அன்றில்"

(குறிஞ்சிப் பாட்டு)

"எரிதகைந் தன்ன செந்தலை யன்றில்"

"அன்றிலும் பையென நரலும்"

(குறுந்தொகை)

"அன்றில் பேடை அரிக்குரல் அழைஇய
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்ப"

(மணிமேகலை)

"எனைப்பார்ப்பர் அன்றில் அலகொடு அலகுற்று
இடுங்கலவி தனைப் பார்ப்பர்"

(மதுரைக் கோவை)

துணையன்பிற்கு எடுத்துக்காட்டாக இப்பறவையே இலக்கியத்தில் சொல்லப்படுகின்றது. இக்காலத்திலும் மணமக்களுக்கு ஆசி வழங்குகின்வறர்கள் "அன்றில் போன்று இணைபிரியாது வாழ்வீர்களாக," என்று வாழ்த்துகின்றனர். இதிலிருந்து ஆண் பறவையும் பெண் பறவையும் எப்பொழுதும் இணைபிரியாது சேர்ந்தே வாழும் என்று தெரியவருகின்றது.

ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தால் வருந்திப் பன்முறை கூவி இறந்துபடும். பிரியாது வாழும் இப்பறவையினை இதன் காரணமாய் பகன்றில் எனவும் பகான்றில் எனவும் சொல்லுவர். அன்றில் என்ற சொல்லும் இக் கருத்து அமைந்தே காணப்படுகிறது. இச் சொல்லினை அன்றி + இல் எனப் பிரித்தால், ஒன்று இல்லாமல் மற்றொன்று உயிர் வாழாது என்னும் பொருளைப் பெறுகின்றோம். கார் காலத்தில் சேவல் தன் பெடையுடன் எப்பொழுதும் இடையறாது இணைந்து இருக்கும். தன் பெடையைக் காணவிடில் சேவல் எழுந்து அலமந்து கூவும். அது தன் பெடையுடன் கூடித் துயிலுங்கால் இடையிடையே விழித்துத் தன் துணை அருகில் இருக்கின்றதா எனப் பார்க்கும்.

## அன்றிலும் அழகியும்

ஆரணங்கு ஒருத்தி தலைவனைப் பிரிந்து அதன் காரணமாய் மெலிவுற்று வருந்தி வாழ்கின்றாள். இத்தகைய தலைவியின் நிலை கண்டு அன்றில் இரங்கி வாளா யிருப்பதாகப் புலவர் ஒருவர் சுவைபடப் பாடியுள்ளார். ஆரணங்கை நோக்கி அன்றில், "நான் என் துணைவனைப் பிரியாது இன்பமுடன் வாழ்கின்றேன். நீயோ உனது துணைவனைப் பிரிந்து துன்பத்தால் வருந்துகின்றாய்.

எனவே உன்னைவிட நானே இன்பநலம் வாய்க்கப் பெற்றவள்'' என்று கூறி எள்ளுவதாகப் புலவர் பாடியிருப்பது போற்றுதற் குரியதாகும். இதைப் போன்றே தலைவி ஒருத்தி அன்றிலை நோக்கிப் பின் வருமாறு வருந்திக் கூறுவதாகக் கலித்தொகையில் ஒரு செய்தி காணப்படுகின்றது. "கரும்பனையிலே வாழும் அன்றில் பறவையே! தலைவனைப் பிரிந்து கலங்கி வாழும் என்னைப் பெருந் துயரத்தில் ஆழ்த்த ஆரவாரிக்கின்றாயா? அன்றி, முன்பு கூடிப் பின்பு பிரிந்தாரை என்போல் கொண்டு இருப்பதால் வருந்துகின்றாயா? நீ கூறுவாயாக!''

## பொதுமகளும் அன்றிலும்

அன்றிலைப் பற்றிய பிறிதொரு சுவையான செய்தி நாலடியாரிலே கவினுறக் காணப்பெறுகின்றது. செல்வந்தன் ஒருவன் பொதுமகள் ஒருத்தியின் வலையிலே வீழ்ந்தான். அவனிடத்தில் செல்வம் இருக்கும் வரையிலும் ஆசை வார்த்தைகளைக்கூறிவந்த அப்பொதுமகள் செல்வம் கரைந்ததும் அவனை வெறுத்து ஒதுக்கினள். அதுகால் அவன் அவள் முன்னர்க்கூறிய அன்பு வார்த்தைகளை எண்ணுகின்றான். "புணர் பிரியா அன்றிலும்போல் வாழ்வோம்" என அவள் கூறியது அவன் நினைவிற்கு வருகின்றது. அத்தகைய அன்பு வார்த்தைகளைக் கூறிய அவள் இன்று தன்னை மிகவும் வெறுக்கின்றாளே என்று தலைவன் வருந்துகின்றான். அவ்வாறு வருந்தும் தலைவன் தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுவது போன்று புலவர் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு:

" பொத்தநூற் கல்லும் புணர்பிரியா அன்றிலும்போல்
நித்தலும் நம்மைப் பிரியலம் என்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாள்
நிற்றியோ? போதியோ? நீ'' [நன்னெஞ்சே

**மகன்றில்**

அன்றிலைப் போன்றே நீர் வாழ் பறவைகளுள் ஒன ருன மகன்றில் என்ற இனத்தில் ஆணும் பெண்ணும் பிரிவின்றி எப்பொழுதும் ஒன்றுபட்டுப் பிணைந்து வாழும். இது கருதியே தமிழ்ப் புலவர்கள், தலைவனும் தலைவியும் பிரிவின்றி ஒன்றி இருப்பதற்கு மகன்றிற் சேர்க்கையை உவமை கூறுவர். ஒருசிலர் மகன்றிலும் அன்றிலும் ஒன்றே என்று கருதுகின்றனர். வேறுசிலர் அன்றில் பறவையின் ஆண் இனமே மகன்றில் என எண்ணுகின் றனர். ஆனல் மகன்றிலும் அன்றிலும் வெவ்வேறு பறவை கள் என்றே கூற வேண்டும். இவ்வுண்மையினைப் பின் வரும் செய்யுள் வரிகளால் நன்கு அறியலாகும்.

"...... ............. ஈர் குரல்
அன்றிற்கு ஒழிய மகன்றிற்கே யார்க்குமிம்
முன்றில் பனையும் எனமொழியும்."
(இ. சோ. உலா.)

மகன்றில் குறுகிய கால்களை உடையது. எப்பொழு தும் தன் பெடையுடன் இது பூவின்மீது வதியும். அவ் வாறு இருக்குங்கால் இடையில் சிறு பூ தடுப்பினும் சேவல் மிகவும் வருந்திப் புலம்பும்.

**பாடும் குயில்**

கரியதும் மின்னும் தூவியை உடையதுமான குயில் பொதுவாக வெயில் நுழைய முடியாத பொதும்பரிலுள்ள மாமரத்தில் வாழ விரும்பும்; புகையை வெறுக்கும். புகையைக் கண்ட மாத்திரத்து தன் பெடையோடு தன் கூட்டினை நீங்கி வேறிடத்திற்குச் சென்றுவிடும். இள வேனிலில் இது மாம்பூவின் தாதினை அளைந்து மகிழும். இதனல் தாது இதன்மேற் படிந்து பொன்னை உரைக்கும்

கட்டளைக் கல்லைப்போலத் தோற்றச் செய்யும். இதனை, "மின்னின் றூவி யிருங் குயில் பொன்னின் உரை திகழ் கட்டளை கடுப்ப மாச்சினை நறுந் தாது கொழுதும்" என்று குறுந்தொகை கூறுகின்றது. தாதிலாடிய குயிலுக்குக் கட்டளைக் கல்லை இதில் உவமித்தது போல,

"நறுந் தாதாடிய தும்பி பசுங் கேழ்ப்
பொன்னுரை கல்லினன் னிறம் பெறாஉம்"

என்று நற்றிணையில் தாதாடிய தும்பிக்கு கட்டளைக் கல்லை உவமித்திருத்தல் இங்கு எண்ணுதற் குரியதாகும்.

மயிலினைப் போன்றே குயிலும் பருவம் உணர்த்தும் பட்டியாக பைந்தமிழ் நாட்டவருக்கு விளங்குகின்றது எனக் கூறலாம். இளையோருக்கு இன்பம் ஊட்டும் இள வேனிலின் வருகையை, பாடும் குயில் இசைக்கும் சோக கீதத்திலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம். இள வேனில் காலத்தில்தான் அது மாமரக் கிளையிலிருந்து கொண்டு ஆரவாரத்தோடு பாடி, இன்பமுடன் கூவி மக்களை நோக்கி,

'அறிவுடையீர் அகறல் ஓம்புமின்'

என்று காதலர்கள் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாது களிப்புடனிருக்க வேண்டிய காலம் இளவேனில், இள வேனில் என்று எடுத்துக் கூறும். இப் பருவத்து குயில் வேட்கை மிகுந்து வாழும். இதன் காரணமாக அது அடிக்கடி கத்தும். இதனைக் கூர்ந்து அறிந்த புரட்சிக் கவி பாரதி 'கத்தும் குயிலே!' என அதனை விளிக்கின்றார். பெடையுடன் கூடிய பின்னர் குயில் கத்தாது வாளா விருக்கும்.

குயில் அடைகாக்கத் தெரியாததால், முட்டையிட்ட குயில் முட்டையினைக் காக்கையின் கூட்டில் வைக்கும் என்ற தற்கால அறிஞர் கருத்திற்குச் சங்க இலக்கியத்

தில் சான்றில்லை. காதலர்க்கு இன்பச் செய்தியை ஊட்டித் துன்புறுத்தும் இப்பறவை, வரிக் குயில், கருங்குயில், செம்போத்து என பலவகைப்படும்.

**வண்டும் நண்டும்**

வண்டாவது பறக்கும் தன்மையினைப் பெற்றிருப்பதால்தான் பறவை வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. இதனைப் புகழேந்தி அறுகால் சிறு பறவை எனக் கூறுகின்றார். தும்பி, தேன், சுரும்பு என வண்டு பலவகைப்படும். தும்பி என்பது இவைகளில் உயர்ந்ததாகும். ஐவகை நிலத்திலும் காணும் பூக்கள் தோறும் சென்று பயின்று அவைகளிலுள்ள தாதையும் தேனையும் இவைகள் உட்கொள்ளும். இதனையும் தூது விடுவதாகச் செய்யுளியற்றல் மரபாகும்.

ஒரு நாவற் கனியை அதன் நிறமும் வடிவமும் நோக்கித் தம் இனம் என்று கருதி வண்டுகள் மொய்த்தன. அதனைப் பழம் என்று கருதி ஒரு நண்டு வந்து கைக்கொண்டது. அது கண்டு வண்டுகள் யாழொலிபோல் ஆரவாரித்தன. இரை தேடும் நாரை ஒன்று அதுகால் ஆங்குவர அந்நண்டும் அப்பழத்தைக் கைவிட்டகன்றது. நற்றிணையில் காணும் இக் காட்சி நமக்கு நகைச்சுவை அளிப்பதாய் நனிசிறந்து விளங்குகின்றது.

**வள்ளுவர் போற்றும் வானம்பாடி**

வானம்பாடியானது வானத்தின் கண்ணே மிக உயரப் பறந்து சென்று இனிய கானம் இசைப்பதால் இப்பெயர் பெற்றது போலும். சிட்டுக்குருவிபோல் இப்பறவை உருவில் சிறியதாக இருந்தாலும் வானமுகட்டைக் கிழித்துச் சென்று பாட்டுப்பாடும் ஆற்றலுடையது. இது

மேகத்தில் கிடைக்கும் நீரையுண்டு மகிழும் எனக் கூறுவர். ஆங்கிலப் புலவர்களைப் போன்று தமிழ்ப் புலவர்களும் வானம்பாடியின் இனிய ஒலியைக் கேட்டு மகிழ்ந்தனர். புள் காணல் மிகவும் அருமையாக இருந்ததால் அதன் வாழ்வு பற்றிய குறிப்பொன்றும் கிடைப்பதற்கில்லை. 'துளிநசைப் புள்ளின் தளிநசைக் கிரங்கி' எனவும், 'வானம் வாழ்த்தி' எனவும், 'தற்பாடிய தளியுணவின் புள்' எனவும் சங்க இலக்கியப் புலவர்களும், 'குடம்பை தனித்தொழிய' என வள்ளுவரும், 'துளிநசை வேட்கை யான் இசை பாடும் புள்' எனக் கல்லாடரும், 'நீர்நிடும்பை புள்ளினுள் ஓங்கல் அறியும்' என நான்மணிக்கடிகை ஆசிரியரும் இப் பறவையினைப் பற்றித் தம் நூல்களில் குறித்துள்ளனர்.

## குருவி

குருவி இனம், சிட்டுக்குருவி, கரிக்குருவி, தேன் சிட்டு, தூக்கணங் குருவி எனப் பலவகைப்படும். வீட்டின் இறப்பிலே கூடுகட்டித் தங்கும் குருவியின் சிறகிற்கு ஆம்பற் பூவின் வாடலை உவமையாகக் கூறுவர். மேலும் இது இல்லின் முற்றத்திலே உலர்த்தப்பட்டிருக்கும் தானிய வகைகளை உண்டு சாணகத்தைக் குடையும் என்று கூறப்படுகின்றது. தினைக் கொல்லையில் காணும் தினையினையும் குருவிகள் தின்று திரும்பும். அவைகள் தினை தின்று கூக்குரலிடும். குருவி ஒரு நொடியில் 50 முறை தன் சிறகுகளை அடித்துக்கொள்ளும் எனச் சொல்லப்படுகின்றது. உயிர் நூலோர் குருவியின் குலைத்துடிப்பு (நாடித்துடிப்பு) ஒரு நொடியில் 1000 முறை துடிக்கிறது என்று கூறுவர்.

குருவி இனத்தைச் சேர்ந்த தூக்கணாங் குருவி பனை மடலில் கூடுகட்டி வாழும். இதனது கூடு அறிவுடையோர் வியக்கத்தக்க வகையில் மிகவும் நுட்பமான அமைப்புடையதாக விளங்கும். இது குறித்து கலித்தொகையானது, "நுட்பமான அமைப்புடைய தூக்கணாங் குருவியின் கூட்டில் நாரானது எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்பதை அறிய முடியாததுபோல் போக்கறிய முடியாத வஞ்சகர் மூளையையும் ஒருவராலும் அறிய முடியாது" என்று கூறியிருப்பது மிகவும் இன்பம் பயப்பதாய் உள்ளது.

## ஆண்குருவியின் அன்பு

ஆண் குருவியொன்று தன் பெண் குருவி கருப்ப முதிர்ந்தமையால் அது கரு உயிர்த்தற் கேற்றவாறு மெத்தென்ற இடம் அமைத்தற் பொருட்டுக் கரும்பின் பூவைக் கோதும் என்று குறுந்தொகையில் காணும் காட்சி, பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் அவர்கள் கவலையுறாது களிப்புடன் இருத்தற்குக் கணவர் செய்யும் செயல்களை நம் நினைவிற்குக் கொண்டு வருகின்றது. இக் காட்சியினை,

"உள்ளூர்க்குரீ இத்துள்ளுநடைச் சேவல்
சூன் முதிர் பேடைக் கீனிலிழை இயர்
தேம் பொதிக் கொண்ட தீங்கிழைக் கரும்பின்
நாரு வெண்பூக் கொழூதும்"

(குறு. 85)

என்று ஆசிரியர் நமக்குக் காட்டுகின்றார்.

## ஊடலோ ஊடல்

ஆண் குருவி ஒன்று தன் பெட்டையைவிட்டு வேறொரு பேடுடன் கூடிக் காலந்தாழ்த்தித் தன் கூட்டிற்கு வந்தது. ஆண் குருவியின் உடலில் புணர் குறிகள் இருப்பதைக்

கண்ட மனையுறை குருவி வெருண்டெழுந்தது. தன் சிறிய குஞ்சுகளொடு அப்பெடை, குடம்பையினுள் ஆண் குருவியைத் தடுத்துவிட, சேவல் குருவி மழையில் நனைந்து, வெளியிலே இருந்தது. இவ்வாறு ஆண் குருவி நெடும்பொழுது மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டிருந் தது. இறுதியில் பெடை கோபம் தணிய அருள்கூர்ந்து இரக்கமுற்று ஆண் குருவியினைத் தன்பால் வருமாறு அழைத்தது. ஆனால் நாணமும் மனச்சாட்சியின் உறுத் தலும் ஆண் குருவியினைப் பெரிதும் தாக்கியதால் அது கூட்டினுள்ளே செல்லாது செயலற்று, வெளியே நின்றது. இதனை,

"உள்ளிறைக் குரீஇக் காரணல் சேவல்
பிறபுலத் துணையோடு உறைபுலத் தல்கி
வந்ததன் செவ்வி நோக்கிப் பேடை
நெறிகிளர் ஈங்கைப் பூவின் அன்ன
சிறுபல் பிள்ளையொடு குடம்பை கடிதலின்
துவலையின் நனைந்த புறத்த தயலது
கூரல் இருக்கை அருளி நெடிது நினைந்து
ஈர நெஞ்சில் தன்வயின் விளிப்பக்
கையற வந்த மையல் மாலை"

என்று நற்றிணை கூறுகின்றது.

## அன்னநடையும் இளமாதர் மென்னடையும்

குறுகிய சிவந்த காலும், ஒன்றற்கொன்று விலகிய மெல்லிய வெண்மையான சிறகும், கால் விரல்களின் இடையே தோல் இணைந்த தன்மையும், மெல்லிய இயற்கைப் பான்மையும் உடைய அன்னம் குமரிக்கடலில் அயிரை மீனை அருந்தி வடமலைக்குச் சென்று அதன் உச்சியில் உறையும். வான்புகழ் வள்ளுவர் உள்ளத்தினையே

அன்றும் ஆற்றலுடைய மென்மையான தூவியை உடைய அன்னம், தூது விடும் பொருள்களில் ஒன்றாகும். இது நீர் வாழ் பறவையாகும்; மணலிலும் தங்கி இருக்கும்; செந் நெற் கழனிகளிலும் தூங்கும். காதல் செய்வதில் பெருமை வாய்ந்த அன்னம் எப்பொழுதும் துணையுடனே திளைத்து மகிழும். குறுகிக் குறுகி மெல்ல நடக்கின்ற தன்மையின் காரணமாய் அன்னத்தின் நடையை இளமாதர் மென் னடைக்கு ஒப்பிடுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த அன்னம் சங்க இலக்கியத்தில் உண்டு. ஆனால் தற்கால மேடைப் பேச்சாளர்கள் கூறுவதுபோன்று பாலையும் நீரையும் கலந்து வைத்தால் இரண்டையும் தனித்தனியே பிரித்துப் பாலை மாத்திரம் உண்ணும் அன்னம் இல்லை. கஞ்சி தோய்ந்த மல் நீரில் கரைந்து செல்லும் அழகு அன்னத்தின் தூவியை ஒத்திருந்தது என்று தமிழ்ப் புலவர் ஒருவர் பேசுகின்றார். இப்பறவை நெய்தற்குரிய தாகப் புலவரால் சொல்லப்படுகின்றது. இது மிகவும் வானத்தில் விரைவாகப் பறக்கும் ஆற்றல் உடையது. இது பற்றியே இதனைக் குதிரைக்கு உவமையாகக் கூறுவர் புலவர்.

## பொய்கையில் காதலர்

மணிநிற மலர்கள் மிக்க அழகிய பொய்கையில், அன்னப் பேடையொன்று தன் சேவலோடு இன்பமாக விளையாடிக்கொண்டிருக்கையில், சேவலன்னத்தை அகன்ற தாமரை இலை மறைத்தது. தன் காதலனைக் காணாத அன்னப்பேடையாகிய காதலி கதுமெனக் கலங்கி செய்வதறியாது நின்றது. அது கால் விண்ணில் விளங்கிய வெண்ணிலவின் நிழலுருவம் பொய்கை நீரில் எதிரொளி செய்யவே, அதனைக் கண்ட பேடை அதனைத் தன் காதல னாகத் தவறாகக் கருதி, மகிழ்வோடு அதைச் சேருதற்கு

நெருங்கியது. ஆனால் அதுபோழ்து சேவலன்னம் அங்கு தோன்ற, பேடை தன் மடமைக்கு நாணிப் பூக்கள் செறிந்த பகுதியில் சென்று மறைந்து நின்றது. இவ்வெழிலோவியத்தை மாண்புறு மருதக் கலியில் காணலாம். அது வருமாறு:

'மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம் தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கி அம் மடப்பெடை
மதிநிழல் நீருட்கண்டு அதுவென
வந்தோடித் துன்னத்தன் எதிர் வரூஉந் துணைகண்டு
மிகநாணிப்
பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சேர் ஊர்.'

## பிறபறவைகள்

மேற்கூறியவற்றைத் தவிரத் தமிழ்நாட்டில் வாழ்ந்து-வாழும் பறவைகளாகிய வங்கா, எழால், குறும்பூழ், கணந்துள், கௌதாரி, கொக்கு, மீன்கொத்தி, யானையங்குருகு, நுளம்பு, வெளவால் முதலியவற்றைப் பற்றி எல்லாம் தமிழ் இலக்கியங்களிலே பல செய்திகளைப் பரக்கக் காணலாம். இவற்றுள் வங்கா என்பது பாலை நிலத்திற்குரியதாகும். இதனது எதிரியே எழால். இது புல்லூறு எனவும் வழங்கப்பெறும். இப்பறவை வங்காவினை அடித்துக்கொல்லும் ஆற்றல் உடையது. வங்காவானது சிவந்த காலையும் வேய்ங்குழலின் இனிய ஓசையையும் உடையது. குறும்பூழ் என்னும் பறவை செந்நிறமுடைய காலையும் உழுந்தஞ்செடியின் அடியை ஒத்த நிறத்தினையும் உடையது. இது பாணர் முதலியவர்களுக்குச் சிறந்த உணவாகப் பயன் பட்டது.

கனாந்துள் எனும் பறவை பாலைநிலத்தில் செல்லும் வழிப்போவோருக்குத் தன் குரலினால் ஆறலைக் கள்வர் உண்மையினை அறிவுறுத்தும் என ஒரு தமிழ்ப் பாடல் கூறுகின்றது. கௌதாரி எனும் பறவை இன்று கதுவாளி என வழங்கப்படுகின்றது. விரைந்து நடந்து செல்லும் ஆற்றல் உடைய இதனை மக்கள் வளர்த்துப் போர் செய்யப் பழக்குவர். ஒன்றோடொன்று போர் செய்யுங் கால் காலில் வாள் கட்டி விடுவர். பொழுது போக்கிற் காக நிகழ்த்தப்பட்ட இவ்விளையாட்டு, தமிழ் நாட்டில் பண்டுதொட்டு நடந்துவந்தது என்பதைப் பின்வரும் பத்துப்பாட்டு வரியால் அறியலாம்.

"மேழகத் தகரொடு சிவல் விளையாட."

நீர்வாழ் பறவைகளுள் ஒன்றான கொக்கு வெள்ளைக் கொக்கு, சாம்பற் கொக்கு என இருவகைப்படும். சாம்பற் கொக்கினை, ஒருசிலர் குருட்டுக் கொக்கெனக் கூறுவதும் உண்டு. மீன், தவளை முதலியவற்றைக் காத்திருந்து வேளை வந்ததும் கொத்தித் தின்னும் திறனை உடையது. இத்திறனைப் பொய் வள்ளுவப் பெருந்தகை,

"கொக்கொக்க கூம்பும் பருவத்து"

எனக் குறிப்பிடுகின்றார்.

பலநிறப் பூக்கள் மணலில் வீழ்ந்து கிடப்பது போலப் பலநிறச் சிறகுகளைப் பெற்ற மீன்கொத்தி ஓர் அழகிய பறவையாகும். இதனை மணிச்சிரல் என்றும் அழைப்பர். இதனது வாய் செம்முல்லைப் பூவை ஒத்திருக்கும். இதனது வாழ்க்கை வரலாற்றை இதனது பெயரிலிருந்தே நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். சங்கப் புலவர்களில் ஒருவரான சாத்தனார் இதனது திறனை,

"செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெறாஅது இரையிழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல்"

எனப் பாடியுள்ளார். இது நீருள் துடுமெனப் பாய்ந்து மூழ்கி மீனைப் பிடித்துக் கொல்லும். பின்னர் இது மரக் கிளையில் அமர்ந்து அதனை உண்ணும்.

யானையங்குருகு பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரிவதற்கில்லை. எனினும் இலக்கியங்களில் இதனது பெயர் காணப்படுகின்றது. பலர் இது நாரையைப் போன்று நீர் வாழ் பறவை இனத்தைச் சார்ந்ததாய் இருக்கும் எனக் கருதுகின்றனர்.

வெளவால் எனும் பறவை மரங்களிலும் பாழடைந்த இடங்களிலும் தலைகீழாகத் தொங்கும் தன்மையது. கரிய நிறமுடைய இதனது சிறகு வலிமையும் மென்மையும் வளைவும் கொண்டது. இதனது நகங்கள் மிகக் கூர்மை வாய்ந்தவை. இதனை வாவல் எனவும் கூறுவர். இரவில் இப்பறவை மெல்லப் பறந்துசென்று பழூஉ மரங்களை அடைந்து நெல்லிக்கனி, மாம்பழம், பலாப்பழம் முதலியவற்றை உண்டு திரும்பும்.

நுளம்பு என்பது ஈயின் வகையைச் சார்ந்தது ஆகும். இரவில் மாட்டைக் கடித்து இது துன்புறுத்தும் எனக் கூறப்படுகின்றது. கின்னரப் பறவை என்ற பறவையும் தமிழ்ப் புலவர்களால் பேசப்படுகின்றது. அழகாக ஆடக் கூடிய சிறகுகளை உடைய இப்பறவை மலைச்சாரல்களில் மிக இனிமையாகப் பாடித்திரியும். இவைதவிர, சிம்புள் என்று கூறப்படும் இருதலைப் புள்ளைப் பற்றிய செய்தியும் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றது. அப்பறவை இரண்டு தலைகளையும் எட்டுக் கால்களையும் எட்டமான் கண்களையும் வளைந்த

பல்லேயும் உடையது என்று கூறப்படுகின்றது. ஈருடலும் ஓருயிரும் ஆக வாழுங் காதலர்க்கு, ஓருயிரும் இருதலேயும் உடைய இப்பறவையினை உவமை காட்டுவது நந்தமிழ்ப் புலவரது மரபாகும்.

## நாரைக்குப் புலவர் செய்த நலம்

பசி, பிணி, மூப்பு இம்மூன்றும் பறவை வாழ்விலும் உண்டு. பழுத்த இலேகளை இளந்தளிர்கள் காப்பதில்லே. ஆனல் பழுத்த கிழங்களை இளம்பிள்ளேகள் காப்பர். இது தான் மனிதனின் சிறப்பாகும். இவ்வடிப்படையில் கிழ நாரை ஒன்றினை நீரோடு படிந்த, வளேந்த கிளே காப்பாற் றும் என்று குறுந்தொகையில் புலவரொருவர் கிழநாரைக் குச் செய்த நலம் நம் நாட்டத்தை எல்லாம் ஈர்ப்பதாய் உள்ளது.

"......................பழவிறல்

பறைவலம் தப்பிய பைதல் நாரை

திரைதோய் வாங்குசினை இருக்கும்." (குறு.)

இவ்வாறு வயது முதிர்ந்த காரணத்தால் பறக்க முடியாத நாரை பற்றி இரக்கம் தோன்ற ஆசிரியர் பாடியிருப்பது அவரது மென்மையான உள்ளத்தினைத் தெள்ளிதிற் புலப் படுத்தும்.

மேற்கூறிய நாரை, பெருநாரை, சிறுநாரை, கரு நாரை, வெள்ளேநாரை, கூழைக்கடா என பலவகைப் படும். வெள்ளிய சிறகையும் பசிய காலேயும் செவ்வாயை யும் உடைய இப்பறவை அயிரை, ஆரல், கழிமீன், கெண்டை, நத்தை, நெற்கதிர் இவற்றையே உணவாகக் கொள்ளும். இது நீர்வாழ் பறவையாதலால், யாறு, கடல்,

ஏரி முதலிய இடங்களில்தான் காணப்பெறும். மீன்
முதலியவற்றை குத்தித் தின்னுதற்கேற்ப இதனது வாய்
அலகுகள் நீண்டு கூரியதாக இருக்கின்றன. வடிவம்
பெரிதாக உள்ளது. கால்கள் மிக நீண்டு வளர்ந்
திருக்கும். இதனது சிறகின் இடையே காணும் செந்நிற
மான தூவிக்கு முள்ளு முருங்கையின் மலரையும், இதன்
காலுக்குத் தினைத்தாளையும் உவமை கூறுவர்.

## நாரை வீரர் வரிசை

நெய்தலைக் கொழுமீன் உண்ணுவதற்காக நெடுந்
தொலைவில் நாரையின் கூட்டமொன்று வரிசையாக
வெண்மணல் மேட்டில் தங்கியிருக்கும் காட்சியினை அரச
னுடைய காலாட்படை பகைவர்பாற் பெரும் வெற்றியைக்
கருதித் தங்கியிருத்தல் போன்றுள்ளது என்று புலவரொரு
வர் நற்றிணையில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க
தொன்றாகும்.

## பறவைகளையே பாடிய பாக்கள்

சில புலவர்கள் பறவைகளையே பாடி அவற்றின்
வாழ்வை அப்படியே காட்டுகின்றனர். இதற்கு எடுத்துக்
காட்டாகப் பிசிராந்தையார் பாடிய பாட்டினைக் கூறலாம்.
இப்புலவர் தம் நண்பன் கோப்பெருஞ்சோழனின் நட்பின்
பெருமையினைக் கூற அன்னத்தினை விளித்து, " நீ குமரிக்
கடலில் மீனை உண்டு பின் இமயம் நோக்கிச் செல்வாயா
யின் இடையிலுள்ள சோழநாட்டினிடத்துத் தங்கி எனது
நண்பன் கிள்ளி கேட்கும்படி எனது பெயரினைக் கூறின்
நினது இன்புறும்பேடை பூண, அணிகலன்கள் பல அளிப்
பான் " என்று பாடுகின்றார். அப்பாடல் பின்வருமாறு:

" அன்னச் சேவலன்னச் சேவல்
.................................................
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர் குவையாயின் இடையது
சோழ நன்னாட்டுப் படினே
.................................................
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசிர்
ஆந்தை யடியுறை யென்னே மாண்ட நின்
இன்புறு பேடை யணியத் தன்
நன்புறு நல்கல நல்குவ னினக்கே" (புறம்)

இது போன்றே பிற்காலப் புலவர்களில் ஒருவரான சத்தி முற்றத்துப் புலவரென்பவர் பாண்டியனைக் காணவந்த இடத்துப் பாழடைந்த சத்திரத்தில் தங்கி இருக்குங்கால் வானத்திலே செல்லும் நாரையினைப் பார்த்து,

"சிவந்த கால்களையுடைய நாரையே! பனங்கிழங்கை நடுவிற் கீறினாற்போன்ற தோற்றத்தையுடைய பவளத்தைப்போலச் சிவப்பாயும் கூர்மையாயும் உள்ள வாயையுடைய செம்மையான நிறத்தோடுகூடிய கால்களையுடைய நாரையே! நீயும் உன் மனைவியும் தென்திசைக் குமரியாடி வடக்கே ஏகுவீராயின் இடையிலுள்ள என் பதியாகிய சத்திமுற்றத்திலுள்ள பொய்கையில் தங்கி, கவர்ப்பல்லியின் சொல்லை இன்னதென்று எதிர்பார்த்திருக்கும் எனது இனிய இல்லாளைக் கண்டு என்னைக் கண்டதாகச் சொல்லுக!" என்று சொல்லி யிருப்பது சிந்தனைக்கொரு விருந்தாகும். நகர் சோதனைக்கு வந்த பாண்டிய மன்னன் இப்பாடலைக் கேட்டுக் கசிந்துருகி வாடையால் வாடிய செந்தமிழ்ப் புலவருக்குத் தனது பட்டாடையைப் போர்த்திச்சென்றனன். பின்னர் மறுநாள் புலவரை அழைத்து வரையாது வழங்கினான். பாண்டிய மன்னனது மனத்தினைக் கரையச் செய்த அப் பசுந் தமிழ்ப்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

"நாராய் நாராய் செங்கா லைராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா லைராய்
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி.
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுத்தி வாவியுட்டங்கி
......................எம்மனைவியைக்கண்டு
........................................................
........................................................
"ஏழை யாளனைக் கண்டன மெனுமே"

(தனிப்பாடற்றிரட்டு.)

## வரலாற்றில் ஒரு புதுமை

பறவைகளைக் குறித்துப் பாடிய காரணத்தால் சில புலவர்கள் தங்களது இயற்பெயருக்குமுன் சிறப்புப் பெயரைப் பெற்றனர். அதாவது பறவைகள் தங்களைப் பற்றிப் பாடிய புலவர்களுக்குப் பட்டங்கள் வழங்கின என்று கூறலாம். "விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" என்று காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றி நச்செள்ளையார் "காக்கை பாடினியார் நச்செள்ளையார்" என்றும், "முதுமரப் பொந்திற் கதுமென வியம்பும் கூகைக் கோழியாளுந் தாழிய பெருங் காடு" என்று மயானத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும் கூகைக் கோழியைப் பற்றிப் பாடிய புலவரைக் "கூகைக் கோழியார்" என்றும் குப்பைக் கோழியின் சண்டையினை வருணித்த புலவரைக் "குப்பைக் கோழியார்" என்றும், அறுகால் பறவையாகிய தும்பியைப் பாடிய புலவரைத் "தும்பிசேர் கீரனார்" என்றும் மக்கள் பிற்காலத்தில் வழங்கலாயினர்.

# 4. விலங்கு—பறவைச் சண்டைகள்

கோழி, தகர், யானை, பூவை, குதிரை, சிவல், கிளி முதலியவற்றை ஒன்றோடொன்று சண்டை செய்ய விட்டும், ஓட விட்டும் வேடிக்கை பார்ப்பது மரபு என்று புறப் பொருள் வெண்பாமாலை கூறுகின்றது. போரில்லாக் காலங்களில், அரசரும் தமிழ் வீரர்களும் யானைச் சண்டை, கோழிச் சண்டை இவற்றைப் பார்த்து மகிழ்வர் என்பதைப் பின் வரும் கலிங்கத்துப் பரணி பாடலால் நன்கு அறிய லாம்.

"வருசெருவொன் றின்மையினன் மற்போரும்
சொற்புலவோர் வாதப் போரும்
இருசிறைவா ரணப்போ மிகன்மதவா
ரணப்போரு மினைய கண்டே"

முதற்குலோத்துங்கன் தன் பகைவரனைவரையும் வென்று தனக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டமையால், தான் செய்யத்தக்க போர் ஒன்று மின்மையால், மற்போரும் சொற் புலவோர் வாதப் போரும், இரண்டு சிறகுகளை யுடைய கோழிகளின் சண்டையும், வலிமையுடைய மதத்தைப் பொழியும் யானைகளின் சண்டையுமாகிய இவை போன்றவற்றைப் பார்த்து மகிழ்ந்தான் என்பதே இப் பாடலின் பொருள்.

# 5. இந்தியாவில் விலங்குகளும் பறவைகளும்

நம் தாயகமாகிய இந்தியா ஒரு நாடா? கண்டமா? எவ்வகையில் அதனைச் சேர்ப்பது? சிமித் போன்ற புலமை சான்ற வரலாற்றுப் பேரறிஞர்கள் தத்தம் நூல்களில் இந்தியாவினை ஒரு துணைக் கண்டம் என்றே குறித்துச் சென்றுள்ளனர். இந்தியாவினை ஒரு துணைக்கண்டம் எனில் அது முக்காலும் உண்மை. ஒரு துணைக் கண்டத்திற்கு வேண்டிய அத்தனை தகுதிகளும் இந்தியாவுக்கு உண்டு.

தெற்கே பல கோடி மைல் பரப்புள்ள நாட்டை விழுங்கிக் கைகொட்டி ஆர்ப்பரிக்கும் குமரிக் கடல்; வடக்கே வான் முட்டும் இமயம்; இடையிலே வற்றாத கங்கை, வளம் பொழியும் காவிரி, பொன் கொழிக்கும் கோதாவரி கிருட்டிணை பாயும் நிலம், தேனொழுகும் பழமுதிர் சோலைகளும், கண்ணாடி நீரோடைகளும், பளிங்குத் தடாகங்களும் வண்ணப் பூக்களும் நிரம்பி உலகையே கவரும் காசுமீர். இவையனைத்தையும் தன்னகத்தே செறியப்பெற்று தெற்கு வடக்காக இரண்டாயிரம் மைலும், கிழக்கு மேற்காக ஆயிரத்து எழுநூறு மைலுமாகப் பரந்து விரிந்து காட்சியளிக்கிறது இந்தியத் துணைக்கண்டம்.

இவை மட்டுமல்ல. இந்தியத் துணைக்கண்டத்திலே பல்வேறுபட்ட மொழியினங்கள், மொழிகள், அவற்றைப் பேசும் மக்கள் உள்ளனர். பல்வேறுபட்ட காலநிலை உண்டு. வேறுபட்ட பறவைகள், விலங்குகள் ஆகியவையும் வாழ்கின்றன.

இமயத்திலே ஒரு வகைப் பறவை, தமிழகத்திலே ஒரு வகைப் பறவை. கங்கை நதி தீரத்திலே ஒரு வகை மான்,

கோதாவரி ஆற்றின் கரையில் ஒருவகை மான். காவிரி யிலே ஒரு வகை மீன், துங்கபத்திரையிலே ஒரு வகை மீன். வங்காளக் காடுகளிலே ஒரு வகைக் கரடி, மேற்கு மலைக் காடுகளிலே ஒரு வகைக் கரடி.

இந்தியாவிலே ஏறத்தாழ 500 வகையான விலங்கு கள், 3000 வகையான பறவைகள் உள்ளன. இன்னும் எவ்வளவோ உயிரனங்கள் இங்கே உள.

விலங்குகள் வாழ்க்கையினை ஆராயவேண்டுமானல் நாம் இந்தியாவினை மட்டும் ஆராயக்கூடாது. ஏனென்றல் மலேயா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் உள்ள உயிரினங்களும் இங்கே உலவுகின்றன. இந்திய உயிரினங் களின் வாழ்க்கையினை அறியப் பெரிதும் உதவ வல்லது இந்தியத் தீபகற்பமாகிய தென்னகமே எனில் தவறில்லை. இந்த இடத்திலே நாம் ஒன்றை நினைவிலே கொள்ளல் நலமே. அஃதாவது விலங்குகளின் வாழ்வை உருவாக்கு வது எல்லைக்கோடுகள் அல்ல. மாருக நில அமைப்பைப் பொறுத்தே அவற்றின் வாழ்வு அமையும். தென்னகத் திலே உள்ள நில அமைப்பும் கால நிலையும் உலகிலே வேறெங்கேயாவது இருப்பின் இரண்டு இடங்களிலும் ஒரே வகையான பறவைகளையும், விலங்குகளையும் பார்க்க லாம். எனவே விலங்குகள் நாடு விட்டு நாடு பெயர்ந்து போதல் பெருமளவில் உண்டு.

இந்தியாவைப் பொதுவாக மூவகைப் பகுதியாகப் பிரிக்கலாம்.

(1) தென்னகம், (2) கங்கைச் சமவெளி, (3) இமய மலைப் பகுதி.

## 1. தென்னகம்

**தென்னகம்,** கங்கைச் சமவெளியினைவிட உயர்ந்தது. ஏறத்தாழ கங்கைச் சமவெளியின் நிலத்தைவிட 2500 அடி

உயர்வானது. தென்னகம் முப்பக்கம் கடல்களாலும், ஒரு பக்கம் மலையாலும் சூழப்பெற்றது.

தென்னகம் மூவகை நில அமைப்பை உடையது

1. மேலைக் கடற்கரையானது, மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி, ஆனைமலை, ஏலக்காய் மலை, மலையாளக் கடற்கரை என்பனவற்றைத் தன்னகத்தே அடக்கி உள்ளது. அங்கே எண்பது அங்குல மழை பெய்யும். மற்றும் நில வளமும், அப்பகுதி மிகவுடையது. எனவே உயிரினங்கள் அங்கு வெகுவாகப் பல்கி உள்ளன.

2. கிழக்குக் கடற்கரையோ எனின் அப்படியன்று. மழையோ மிகக்குறைவு. 40 அங்குலத்திற்குமேல் மழை பெய்யவே பெய்யாது. ஆற்றுப்படுகைகள் உள. நிலவளமும் குறைவு.

3. நடுப்பகுதி இதைவிட மோசம். வெறும் குன்று களும், கற்றரைகளுமே நிறைந்துள்ளன. மழை வளம் கிடையாது.

தென்னகத்தில் வாழ்கின்ற விலங்குகள் :—வெருவு, கலைமான், நரி, மந்தி, ஓநாய், செந்நாய், புள்ளிமான், சிறுத்தை, யானை, கரடி, புலி, உடும்பு, குரங்கு, காட்டெருமை, மௌா முதலியவையாம்.

இவை தவிர இமயமலை, வங்காளம் முதலிய பகுதி களிலுள்ள விலங்குகளும் தென்னகக் காடுகளிலே உள் ளன.

## 2. கங்கைச் சமவெளி

கங்கைச் சமவெளி நல்ல நிலவளமும் நீர்வளமும் உடையது. அவற்றோடு அழகான கால நிலையும் உடையது. எனவே இப்பகுதியிலே மக்கள் செறிவு அதிகம். ஆனால் இதற்கு மேற்கே உள்ள இராசபுதனமோ நேர் எதிரிடை,

அஃதாவது அஃதோர் பாலைவனம். ஆனால் ஒரு காலத்தில் அது வளமும் உயிரினமும் செறிந்த இடம் எனச் சொல்லப் படுகிறது.

ஆனால் நாடோறும் மக்கட் பெருக்கம் மிக அதிகமாகி வருகிறது. எனவே காடுகள் அழிந்து நாடாகின்றன. ஆகலால் காடுவாழ் உயிர்கள் அண்மையிலுள்ள காடுகளுக்குள் நுழைகின்றன. வடக்கே இமயமலைப் பகுதிக்கும் தெற்கே தென்னக மலைக் காடுகளுக்கும் விலங்குகள் விரைந்து வருகின்றன.

கங்கைச் சமவெளியின் உயிர் இனங்களை மூவகையாகப் பிரிக்கலாம்.

1. இமயமலைச் சாரலில் வாழ்வன :—புலி, சிறுத்தை, சாம்பார் மான், கரடி, குரைக்குமான், யானை, எருமை, நீர் யானை, சதுப்புநில மான், நாலு கொம்பு மான்.

2. நடுப்பகுதியில் வாழ்வன :—கருப்பெருமை.

3. ஆரவல்லி காட்டில் வாழ்வன :—புலி, சாம்பர் மான், குரைக்கும் மான், சிறுத்தை சோம்பேறிக் கரடி.

## 3. இமயமலைப்பகுதி

இப்பகுதியும் மூவகையாகப் பிரிபடும்.

1. மேற்கு இமயமலைப்பகுதி :—இப்பகுதியில், பலவித ஆடுகள், மான்கள், கரடிகள், சிறுத்தைகள் வாழ்கின்றன. இவைகளில் கருப்புக் கரடியினை சாதாரணமாக எல்லா இடங்களிலும் காணலாம். 10,000 அடிக்கு மேற்பட்ட இடங்களில் பழுப்பு நிறக் கரடிகளும், செம்மறி ஆடுகளும், பனிச் சிறுத்தைகளும் காணப்படுகின்றன. ஏனைய மிருகங்களை திபெத்து நாட்டின் எல்லை ஓரத்திலே பார்க்கலாம்.

2. மத்திய இமயமலைப்பகுதி சட்லெஜ் நதியின் கிழக்கே அமைந்திருக்கும் இப் பகுதியில் மழையதிகம்; நீர்க் கசிவும் அதிகம். இமயமலைப் பகுதியில் வாழும் எல்லா விலங்குகளும் இங்கே வாழ்ந்தாலும் ஆட்டினத்தில் சில அருகிக்கொண்டே வருகின்றன. பழுப்பு நிறமுள்ள கரடியும் இப் பகுதியில் காணப்படுவதில்லை. ஆனால் இங்கு சிறுத்தைகள், புலிகள் அதிக அளவில் உள்ளன.

3. கிழக்கு இமயமலைப்பகுதி : மான்களும், கருப்புக் கரடிகளும் இப் பகுதியில் ஏராளமாக வாழ்கின்றன. சிறுத்தைகளும் இங்கு உண்டு. மலையடிவாரத்தில் புலிகளையும் யானைகளையும் காணலாம். கிழக்குப் பகுதியில் ஒரு கொம்புடைய பெரிய காண்டா மிருகங்கள் வாழ்கின்றன.

# நாட்டின் செல்வம்

விலங்குகளும் பறவைகளும் ஒரு நாட்டின் விலை மதிப் பற்ற பெரும் செல்வம். நம் நாட்டின் நிலையும் இதற்கு விதி விலக்கில்லை. விதி விலக்கில்லாதது மட்டுமல்ல, விலங்கு களோடும் பறவைகளோடும் வேறுபாடற்ற நிலையில் உற வுடையது. மனிதன் முதல் தேவன் வரை விலங்குகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள நாடு தமிழகம். சங்க இலக்கிய காலம் முதல் நேற்றுப் பாடிய பாரதி வரை பறவைகள், விலங்கினங்கள் பற்றிப் பாடிய பாடல்கள் நிறைந்த நாடு. ஆண்டவர்க்கு ஊர்தியாய், அவதரிக்கும் பிறப்பாய், அறிவளிக்கும் ஆசானுய், விலங்கினமும் பறவை யினமும் இந் நாட்டில் விளங்குவது ஒன்றே நம்பால் அவை கட்கு ஏற்ற உறவை விளக்கும். காக்கை கரைந்தது கண்டு பாடிய புலவர், காக்கைப் பாடினியார் என்றே கூறப்பட்ட நிலை சங்க இலக்கியம் கூறும். "காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதி பாட்டு காக்கையுடன் கொண்ட நல் லுறவை, நல்லுணர்வைக் காட்டும். இறை உணர்வில், இலக்கியத்தில், அழகுணர்வில், பலர் பாட்டில், விஞ் ஞானத்தில், பொருளாதாரத் துறையில் விலங்கினமும், பறவைகளும் நம்மோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை யானுலும் காலப்போக்கில் அவைகள் புறக்கணிக்கப்பட் டன. புறக்கணிக்கப்பட்டதோடு நிற்கவில்லை, வேட்டை யாடப்பட்டன. வேறு வழிகளிலும் அழித்து விடப் பட்டன.

உறவுணர்வு கொண்டிருந்த நிலை மாறி உயிர்வதை செய்யும் நிலைக்கு நம் நாட்டினர் வந்து விட்டனர். இறை யுணர்வு நிலையிலிருந்து மனிதர்க்கு இரையாக ஆக்கிக் கொள்ளும் நிலைக்கு விலங்குகளை ஒழிக்க ஆரம்பித்தோம். இந்நிலையோடு நில்லாது இடையில் ஏற்பட்ட எண்ணெய் தட்டுப்பாடு காரணமாய் விலங்குகள் வாழும் காடுகளையே

கரிக்காக அழித்தோம். கண்ட பயன் என்ன? விலங்குகள் ஒழிந்தது மட்டுமல்ல, நாட்டில் மழை நின்று நாட்டில் வளமும் குறைந்தது. ஒரு புறம் மரம் நடு விழாவிற்கு அரசியலார் முற்படுவார்கள். மற்றொரு புறம் மரங்கள் கரிக்காக அழிக்கப்பட்டு காடுகள் மறைந்து வருகின்றன வீழ்ந்துபடும் காடுகள் ஒரு புறமிருக்க வெடி மருந்து ஒரு புறத்தில் விலங்கினங்களின் அழிவிற்கு ஒரு காரணமாயிற்று. வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டது மனிதனுக்குக் கொண்டாட்டமாய்விட்டது. விலங்குகளை வேட்டையாடி தன் விருப்பம்போல்மனம்போல்மகிழத்தான் விலங்குகள் படைக்கப்பட்டுள்ளன என எண்ணினன் மனிதன். வாழ இடமின்றி வனங்கள் அழிக்கப்படல் ஒருபுறம், தப்பி வாழ்ந்தாலும் வேட்டையாடப்படல் வேறொருபுறம் என்ற அளவிலே விலங்குகளின் விதி வேலை செய்தது. இந்நிலையில் சிங்கம் இந்நாட்டில் பெரிதும் காணப்படவில்லை. அசாமிலும் (Assam) காண்டா மிருகங்கள் அருகி வருகின்றன. மானினங்கள் அழிக்கப்பட்டுவிட்டதால் மனிதனே புலிகளுக்கு உணவாக மாறி வருகின்றான். இந்நிலையில் வனவிலங்குப் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகிறது. இவைகள் மறையாது பாதுகாக்க நாம் செய்ய வேண்டியது என்ன? ஏற்ற செயலாற்றி பாதுகாக்கப்படாவிடில் விலங்குகள், கனவுலகின் காட்சியாய், கடந்த காலத்தின் கற்பனையாய் ஆகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

விலங்குகள், பறவைகள் இவைகளின் பாதுகாப்பு ஏன்? சிங்கமும், சிறு நரியும், மானும், மரநாயும், கிளியும் குயிலும் நமக்கு எவ்விதத்தில் பயன்படுகின்றன? உணவளிக்கும் வயல்களுக்கு அவைகள் ஊறு செய்யவில்லையா? உழவு செய்யும் மாடுகளை விலங்குகள் உயிர்வதை செய்யவில்லையா?

வேட்டைக்கென சட்ட திட்டங்கள் செய்யப்பட்ட பின்னர் வேட்டைக்காரர்கள் வெந்து பேசுகின்றனர். விருப்பம்போல் வேட்டையாடினால் என்ன? விலங்கினமும் பறவைகளும் வேட்டையாடப்பட்டால் என்ன? வாழ வேண்டியது யார்? மனிதனா? பிற உயிர்களா? இவ்வினாக் கள்தான் எழுகின்றன. மனிதனும் பிற உயிர்களும் ஒரு வரோடொருவர் ஒன்று பட்டவர்களாய் வாழ வேண்டு மென்பதை மறந்திருக்கின்றனர். இவைகளால் நாம் பெறும் பல்வேறு பயன்களையும் மறந்திருக்கின்றனர். எத்தகைய சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம் என எண்ணிப் பார்க்க வேண்டும். விலங்கினங்களும் பறவைகளும் அவை கள் வாழ்வதற்கென ஏற்ற இடங்களும் நம் நாட்டில் அதி கம் உள்ளன. எத்தனையோ பறவைகளும் விலங்குகளும் மறைந்து விட்டன. எனவே இனியும் இழந்துவிட நாம் தயாராயில்லை. அவைகளைப் பாதுகாக்கவும் பராமரிக்க வும் முன் வந்துள்ளோம். பாதுகாப்பு, பராமரிப்பு என்றால் கொடிய விலங்குகளைக் கொல்லாமல் விடுவது என்ற பொருள் அல்ல. தேவை ஏற்படின் சிலவற்றைக் கொன் றும், சிலவற்றைத் தடைப்படுத்தியும் வைக்கவேண்டும். செடி கொடிகளைப் பாதுகாப்பது ஒருபுறமும், வன விலங் குகளைப் பாதுகாப்பது மற்றொருபுறமும் என்ற நிலையில் தான் பாதுகாப்பும் பராமரிப்பும் நடைபெறும்.

இந்தியக் காட்டுச் சட்டத்தின் மூலம் சில பகுதி காடு கள் ஒதுக்கப்பட்டன. அங்கு வேட்டையாட முடியாது. எனவே விலங்குகள் பாதுகாப்புப்பெற்றன. இருப்பினும் இதர இடங்களில்கண்மூடித்தனமாக விலங்குகளும் பறவை களும் கொல்லப்பட்டன. எனவே சட்டம் விரிவாக்கப்பட் டது. 1912-ஆம் ஆண்டு வனவிலங்குகள் பறவைகள் பாது காப்புச் சட்டம் ஒன்று செய்யப்பட்டது. அதன்படி சில பகுதிகள் வனவிலங்கு பராமரிப்புச் சாலைகளுக்கு ஒதுக்க

வும், சில இடங்களை வேட்டையாடக் கூடாத பகுதியென அறிவிக்கவும் காட்டு இலாக்காவினருக்கு அதிகாரமளிக்கப்பட்டது. துப்பாக்கி உபயோகிப்பதற்கு அனுமதி வழங்குவதிலும் கட்டுப்பாடு செய்யப்பட்டது.

தமிழக அரசும் காட்டு மிருகங்களைக் காப்பாற்ற 1879-ம் ஆண்டில் பல சட்டங்களை இயற்றியுள்ளது. பொதுமக்களும் ஒத்துழைத்தனர். நீலகிரிச் சங்கம் 1879-ல் நிறுவப்பட்டு பாதுகாப்புக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு கிட்டிற்று. அதே ஆண்டில் வேட்டையாடத் தகுதியில்லாத காலங்களைக் குறிப்பிட்டதுடன் நன்கு வளர்ச்சி பெருதவிலங்கினங்களுக்கும் பாதுகாப்பு அளித்தது. 1915-ஆம் ஆண்டு மதுரை மாவட்ட தண்டல் நாயகத்தைத் தலைவராய்க்கொண்ட பழனிமலை வேட்டைச் சங்கம் நிறுவப்பட்டது. 1938-ஆம் ஆண்டு முதுமலை வனவிலங்குப் பராமரிப்பு நிலையம் நிறுவப்பட்டது. இந்நிலையம் உதகமண்டலத்திலிருந்து நாற்பது மைல் தொலைவிலுள்ளது. இங்குள்ள விலங்குகளோ பறவைகளோ வேட்டைப் பொருள்கள் அல்ல. வேட்டைக்காரர்களும் வேட்டையாட அனுமதிக்கப்படுவதில்லை. பார்வையாளராகச் செல்லுகின்ற மக்கள் கார்குடியிலும், முதுமலையிலும் தங்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

விலங்குகள் நிலை ஒரு புறமிருக்க பறவைகள் பராமரிப்புக்கென அரசியலார் திட்டம் வகுத்துள்ளனர். தீவிரமாய்ச் செயலாற்றியும் வருகின்றனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் இயற்கையாய் அமைந்துள்ள பறவைக் குடியிருப்பு ஒன்றை பறவைப் பராமரிப்பு நிலையமாக அமைத்துள்ளனர். சென்னை, திருச்சி சாலையில் 47 வது கல்லில் மேற்கே திரும்பி 3கல் தொலைவு சென்று பின் 8கல் தொலைவு அங்கிருந்து தெற்கே சென்ருல், அங்கு 74 ஏக்கர் பரப்

புடைய ஏரி ஒன்றினைக் காணலாம். நீர் நிறைந்தால் வெள்ளை நாரையும் கரு நாரையும் அதன் இனத்தைச் சேர்ந்த பறவைகளும் நீர் நிலைகளுக்குச் செல்லல் இயற்கை. இந்த ஏரியும் விதி விலக்கல்ல. ஏரியில் நீர் நிறைந்ததும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பறவைகள் செல்லு கின்றன. ஏரியின் உள் உள்ள மரங்களில் கூடுகட்டி குஞ்சு பொறிக்கின்றன. நாற்பது ஆண்டுகளாக இம்மாதிரி நடைபெறுவதால் அப்பறவைகளையும் அவற்றின் கூடுகளை யும் அங்குள்ள கிராமத்தினர் பாதுகாக்கின்றனர். இப் பாதுகாப்பினால் அக் கிராமத்தினர் பலனும் பெறுகின்ற னர். ஆயிரக்கணக்கான பறவைகள் தங்கிக் கழிக்கும் மலங்கள் ஏரி நீருடன் கலப்பதால் ஆயக்கட்டு நிலங்கள் அதிக விளைவையும் தருகின்றன. வேறு உரமே தேவை யில்லாத நிலையும் ஏற்படுகின்றது. பறவைப் பராமரிப்பும் பாதுகாப்பும் ஒருபுறம் நடைபெறும்போது, பயிர் விளை வின் மிகுதியும் காண்கின்ற நிலை காணும்போது பறவை களால் நாம் அடையும் பெரும் பயன் நன்கு தெளிவடை கின்றது.

உரிமை பெறும் முன்னர் இந்நிலை என்றால் உரிமை பெற்றபின் விலங்கு, பறவைப் பாரமரிப்பு, பாதுகாப்பு இவைகட்கு நம் அரசினர் செய்துள்ளதென்ன? இரண்டாம் உலகப் பெரும் போரின் விளைவால் ஏற்பட்ட எண்ணெய்த் தட்டுப்பாடு நீக்கக் காடுகள் அழிக்கப்பட்டன. உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டதால் உயிரினங்கள் வாழும் காடுகள் உணவுப் பொருள் உற்பத்திக்காக உபயோகப் படுத்தப் பட்டன. இவற்றால் வனவிலங்குகள் பாதிக்கப்பட்டன. எனவே நாடு உரிமை பெற்ற காலத்தில் வனவிலங்குகள் மறையும் பொருளாய் மாற ஆரம்பித்தன. இந்நிலை மாற அர சினர் சட்டம் இயற்றினர். காட்டுநீர் வாரக்கொள்கையினைச் செம்மைப்படுத்தினர். 1952 ல் மத்திய வனவிலங்குப் பரா

மரிப்பு மன்றம் ஏற்படுத்தப்பட்டது. 1952 ல் மைசூரிலும் 1955 ல் கல்கத்தாவிலும் கூடிய இம்மன்றத்தின் செயற்குழுவினர் 1953 ல் மத்திய பிரதேசத்திலும், 1955 ல் உதகமண்டலத்திலும் கூடினர். தமிழகமும் 1954ல் மாநில வனவிலங்குப் பராமரிப்பு மன்றம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ரூ 135 லட்சம், இயங்கி வரும் பராமரிப்பு நிலையங்களை விரிவு படுத்தவும், புதிய பூங்காக்கள் ஏற்படுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய வனவிலங்குப் பராமரிப்பு மன்றமும் திட்டத்திற்கேற்ப மசோதா ஒன்றும் வழங்கியுள்ளது. இம் மசோதா அரசினர்க்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. வேட்டையாடுதலைத் தடுக்கவும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் மேலும் விரிவுகள் செய்யவும் ஏற்பாடாகியுள்ளது. மேய்ச்சலும், மரம் வெட்டுதலும், எரித்தலும் கட்டுப்படுத்தப்பெறும்.

திட்டங்கள் தீட்டுவதால் மட்டுமோ அல்லது சட்டங்கள் செய்வதால் மட்டுமோ பயன் இல்லை. தீட்டிய திட்டங்களைச் செயலில் நிறைவேற்ற, போட்ட சட்டங்களை அமல் நடத்த, அதன்படி நடக்க கட்டுப்பட ஆள்வோரும் ஆளப்படுவோரும் முன்வர வேண்டும். ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அரசியலாரோடு மக்களும் ஒத்து உழைத்தால்தான் எத்திட்டமும் நிறைவேறும். எனவே வனவிலங்கு பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் மக்களின் ஒத்துழைப்பு மெத்தவும் தேவை. அரசியலாரின் அன்பழைப்பும் அவசியம்தான். வனவிலங்குகள் பாதுகாக்கப்பட, வனங்கள் பாதுகாக்கப்படவேண்டும். பூங்காக்கள் புதியன தோற்றுவிக்கப்படவேண்டும். பழையன பராமரிக்கப்பட வேண்டும். காட்டு மரங்களை வெட்டுதல் கூடாது. புதிய மரங்கள் பயிர் செய்யப்படுதலும் முறையே நடைபெற

வேண்டும். மரம் நடு விழா நடத்திப் பின்னர் மறுநாளே நட்ட மரத்திற்கு நீர் வார்க்காது விடும் மரம் நடு விழாக்கள் மறைய வேண்டும். சாலையெங்கும் சோலைகளாய், பாலைவனமெல்லாம் பசுஞ் சோலையாய் மாற, மாற்ற மக்கள் முன்வர வேண்டும். வேட்டைக்கென ஒதுக்கப்பட்ட காடுகள் தவிர வேறு இடங்களில் வேட்டையாடக் கூடாது. வேட்டையாடுதலும்கூட குறிப்பிட்ட அளவோடு நிற்க வேண்டும். எனவே மக்களின் மன ஒற்றுமையும், ஒத்துழைப்பும் தேவை. மக்களும் மக்களாட்சியும் ஒன்று சேர்ந்து விலங்கினங்களையும் பறவைகளையும் பாதுகாக்க வேண்டும். அரசுடன் ஆள்வோர் ஒத்துழைத்து ஆவன செய்தல் வேண்டும்.

வாழ்க விலங்கினம்! வளர்க பறவையினம்!